# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,866 — 1969 අගෝස්තු 8 වැනි සිකුරාදා — 1969.8.8

14,866 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு ஒகத்து மாதம் 8 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 853 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 879 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 870 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 871 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 878 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆம் டிசெம்பர் மீ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்.
பதில் அரசாங்க அழுத்தகன்.

---



ජාතික පුස්තකාල හා ප්‍රලේඛන ...

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகாமான முறையில் திரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகாமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 திருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

No. AB 73/×.2129/69.

## ஆயுள்வேத திணைக்களம்

### உடற்றொழிலியலுக்கும், உடலமைப்பியலுக்கும் பொறுப்பாயுள்ள விரிவுரையாளர் பதவி—ஆயுள்வேத கல்லூரி

ஆயுள்வேத திணைக்களத்தின் ஆயுள்வேதக் கல்லூரியில் உடற்றொழிலியலுக்கும், உடலமைப்பியலுக்கும் பொறுப்பாயுள்ள விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இவ்வலுவலகத்தினால் அளிக்கப்படும் அச்சிட்ட விண்ணப்பப் பத்திரங்களில் செய்யப்பெற்று பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னதாக செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இலக்கம் 500, கொழும்பு-1, என்ற முகவரியில் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 22.8.1969.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 29.8.1969.

குறிப்பு.—

(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தைத் தபால்மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும், 9″ × 4″ அளவிற்குக் குறையாததும், முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லாதவரா என்பதனையும் விளக்கமாகக் காட்டல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. இறுதிநாட்கள் வரையும் விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பகாரர்கள் அதனாலேற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை குறிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்கசேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும், பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாக இருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் புரிவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள், அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணமாவதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

**2. நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.—**

(i) இப்பதவி நிரந்தரமானதும், உபகாரச் சம்பள உரித்துடையது மாகும். விதவைகள், அநாதைகள் சகாயநிதி உதவுதொகை செலுத்தப்படும்.

(ii) தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர்கள் சொந்த மருத்துவச் சேவை யில் ஈடுபடும் உரித்துடையராகார்.

**3. சம்பளமும், படிகளும்.—**

இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு.—5,880 ரூபா 7 × 360 உடன் 10 × 480—13,200 ரூபா. 11,280 ரூபாவில் ஈராண்டு நிறுத்துகையும், 11,760 ரூபாவில் வினைத்திறன்காண் தடையுமுண்டு. 11,760 ரூபாவுக்கு முன்னுள்ள வினைத்திறன்காண் தடைக்கப்பால் பதவி உயர்வு பெறுவதற்கு பட்டத்திற்குப் பின்பெறும் தகைமை பெறுதல் வேண்டும்.

**4. தகைமைகள்.—**

ஒவ்வொரு அபேட்சகரும், தான்—

(i) சிறந்த நன்னடத்தையும், தேகாரோக்கியமும் உடையவரென்றும்,

(ii) 22.8.1969 ஆந் திகதியில் 21 வயதுக்குக் குறையாதவரென்றும் 40 வயதுக்குக் கூடியவரல்ல என்றும், (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது).

(iii) இலங்கை பல்கலைக் கழகத்தினது எம். பி. பி. எஸ். பட்டம் அல்லது இலங்கை மருத்துவ அவையினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பட்டமெதுவும் உடையவரென்றும்,

திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் ஒன்றையோ அல்லது முழுவதையுமோ வேண்டப்படும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்:—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்கு விதிக் கோவையின் நோக்கத்துக்கென வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) நன்னடத்தை பற்றிய இரு சான்றிதழ்கள். அவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழில் அல்லது தொழிநுட்பச் சான்றிதழ் அல்லது இரண்டும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்கள்.

**குறிப்பு.—**

(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிவங்களையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) வேண்டப்படும்பொழுது சாதனங்களை அளிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்கசேவை ஆணைக்குழுவின் செயலாளருக்குக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட (" ஆ " எனக் குறிப்பிடப்பட்ட) அஞ்சலட்டையை இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும், அவை சம்பந்தமான வேறு தொடர்புகளும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தர்களுக்காயினும் நேராக அனுப்புதல் கூடாது.

8. இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்கசேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சலட்டையை ("அ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு நிரப்பி, திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கமைய ஒழுகுபவர்கள் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை ஏதுமுடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்கசேவை ஆணைக்குழு.

அரசாங்கசேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு—1,
1969 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 1 ந உ.

**8–541—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866**

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

### காதியின் பதவி

முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் கீழ் (அதிகாரம் 115) கொழும்பு தெற்கு காதியின் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கென நீதிச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்கள் கோருகின்றது.

விண்ணப்பதாரிகள் ஆண் முஸ்லீம்களாகவும், 35 வயதுக்குட்படாதவர்களாகவும், நல்லொழுக்கமும் நல்ல நிலையிலுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஒரு காதி எப்பிரதேசத்திற்கென நியமிக்கப்படுகிறாரோ அவர் அப்பிரதேசத்திலேயே சட்டமுறைப்படி வசிக்கக் கடப்பாடுடையவர். இங்கு குறிப்பிடப்பட்ட நீதிபரிபாலன மாவட்டம் பின்வரும் பிரதேசங்களைக் கொண்டதாகும்.

கொழும்பு மாநகரின் கும்பனித்தெரு, உனுப்பிட்டி, வேக்கந்த கறுவாத்தோட்டம், கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, கல்லக்கவுன், திம்பிரிகசய, வெள்ளவத்தை வடக்கு, வெள்ளவத்தை தெற்கு, ஆகிய மாநகர வட்டாரங்களையும், கொட்டா ரோட்டிலுள்ள சுதேச வைத்தியக் கல்லூரியும் வைத்தியசாலையும் ஆகியவற்றிற்குக் கிட்ட ஆரம்பித்து பத்தரமுல்ல வழியாக தலங்கம வடக்கு, மலபே, கொகந்தர, அதுறுகிரிய, பனுகொட, கொடகம, மீகொட என்பவற்றிற்கு ஊடாகச் சென்று பாதுக்கையில் முடிவடையும் பொதுவேலைப்பகுதி வீதிக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தையும் கொண்ட கொழும்பு நீதிபரிபாலன மாவட்டத்தைச் சேர்ந்த அந்தப்பாகம்.

தெரியப்படுபவர், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படும் ஒரு கால வெல்லைக்கு நியமிக்கப்படுவர்.

விண்ணப்பங்கள் என்னிடமிருந்து பெறக்கூடிய விசேட படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். அவை 31.8.1969 ம் திகதிக்கு முன்பாக இந்த அலுவலகத்தைச் சேர்தல் வேண்டும்.

சிறீமேவன் அமரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
தபாற் பெட்டி இலக்கம் 573,
கொழும்பு 12,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 1 ந உ.

**8–542—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866**

## உள்ளூராட்சி அமைச்சு

### நீர்வழங்கல், வடிகாலமைப்பு உள்ளூராட்சி வேலைகள் பகுதி

### மேற்பார்வை ஓவசியர் பதவிகள் (வகுப்பு 4)

உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல், வடிகாலமைப்பு உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் 4 ஆம் தரமேற்பார்வை ஓவசியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் கீழ்க்காணப்படும் மாதிரிப்படிவத்தில் நிரப்பப்பட்டு பதிவுத்தபால் மூலம் கீழே உள்ள 6,7,8 ஆம் பந்திகளின் நியதிகளுக்கமைய 1969.8.23 ஆம் திகதிபோ அல்லது 'அதற்கு முன்னரோ எனக்குக் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

1. **சம்பள அளவுத்திட்டம்.**—ரூபா 1,044—8 × 42—1,380 வருடாந்தம்.

2. **வயதெல்லை.**—1969.8.23 ஆம் திகதி 18 வயதிற்குக் குறையாத வராகவும் 25 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. **கல்வியும் ஏனைய தகைமைகளும்.**—

(அ) சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் எண்கணிதத்தையும் ஒருபாடமாகக் கொண்டு சித்தியெய்தியவராகவும்,

அல்லது

(2) கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரணதரம்) சிங்களம்/தமிழ்ப்பாஷை, எண்கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத இருக்கைகளில் தோன்றிச் சித்தியெய்தியவராகவும்,

அல்லது

(2) உயர்தரப்பரீட்சை ஒன்றில் சித்தியெய்தியிருத்தல்.

**குறிப்பு 1.**—பௌதிகம் அல்லது எந்திரவியலில் சித்தியெய்தி உள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

(2) 4 ஆம் வகுப்பு மேற்பார்வை ஓவசியர்களாக நியமிக்கப் படுமுன் விண்ணப்பதாரர்கள் கட்டிட அமைப்பு, கிராமா பிவிருத்தியில் நீர்வழங்கல், வடிகாலமைப்பிலும் பெயரிடாப்பைப் பேணல் ஆகியவற்றில் 12 மாதத் திணைக்களப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்திருக்கவேண்டும்.

அல்லது

(ஆ) (1) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் சித்தியெய்திய வராகவும்,

அல்லது

(2) கல்விப் பொதுத்/தராதரப் பரீட்சையில் (சாதாரணதரம்) சிங்களம்/தமிழ்ப் பாடங்கள் உட்பட ஆறுபாடங்களில் இரண்டிற் மேற்படாத இருக்கைகளில் தோன்றிச் சித்தியெய்தியவரா கவும்,

அல்லது

(3) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் நடாத்தப்பட்ட கீழ் வரும் பயிற்சிநெறியில் சித்தியடைந்திருப்பதுடன் இதற்குச் சமமான அல்லது உயர்தரப் பரீட்சையிலும் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

(அ) கனிஷ்ட தொழில்நுட்ப அனுவலாளர்கள் பயிற்சி நெறி (இருவருடங்கள்)

(ஆ) நிலஅளவை, மட்டப்படுத்தல் பயிற்சி நெறி (ஒரு வருடம்)

(இ) மாநகரப் பொறியியல், அமைப்புப் பொறியியல், அல்லது கட்டிட அமைப்பில் பகுதிநேரப் பயிற்சி

அல்லது

(ஈ) தொழில் நுணுக்கத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் அல்லது கல்லூரியால் நடாத்தப்பட்ட பயிற்சிநெறி, நீர் வழங்கல், வடிகாலமைப்புப் பணிப்பாளரின் கருத்தில் மேலே (அ), (ஆ) அல்லது (இ) வில் உள்ள பயிற்சி நெறிக்குச் சமமாக அல்லது உயர்ந்ததாக இருத்தல் வேண்டும்.

4. **ஒப்பந்த நிபந்தனைகள்.**—

(1) இப்பதவிகள் தற்காலிகமானவை. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் முதலில் ஒருவருட காலம் சோதனைமுறையில் வைக்கப்படுவர்.

(2) உத்தியோகத்தர்கள் அரசாங்கசேவைச் சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்தல் வேண்டும்.

5. அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பலாம். திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பும் விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற்று, தாமதத்திற்குச் செல்லுபடியான காரணங்கள் அவராற் காட்டப்பட்டு அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு சிபார்சு செய்யப்பட்டால் அன்றி விதிக்கப்பட்ட திகதியின்பின் எனக்குக் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

விண்ணப்பங்களை அனுப்பும் போது திணைக்களத் தலைவர்கள் அலுவலாளர் தெரிவு செய்யப்பட்டால் விண்ணப்பதாரரை நியமனத்திற்காக விலக்கவோ முடியாதோ என்பதைக் குறிப்பிட வேண்டும்.

6. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் (முக்கிய கவனிப்பு ஞானஸ்தானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்திற்கெனக் கொடுக்கப்படும் சாட்சிப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) உயர்கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(இ) நற்சான்றிதழ்கள் இரண்டு (ஏற்கனவே அரசாங்கசேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து நற்சான்றிதழ்கள் வேண்டப்படமாட்டாது.)

(ஈ) சிங்களம்/தமிழில் சித்தியெய்திய அதி உயர்ந்த சான்றிதழ்.

7. விண்ணப்பங்கள் அல்லது அவைசம்பந்தமான வேறு தொடர்புகளும் இரத்மலானை, உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல், வடிகாலமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதிப் பதில் பணிப்பாளருக்கு முகவரியிட்டு அனுப்பப்படவேண்டுமேயன்றி இப்பகுதியின் உத்தியோகத்தர் எவருக்கும் பெயர் குறிப்பிட்டு எழுதக்கூடாது.

8. அரசாங்கசேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

ஆர். வீ. பெருமையினர்,
பதிற்பணிப்பாளர்.

நீர்வழங்கல், வடிகாலமைப்பு,
உள்ளூராட்சி வேலைகள் பகுதி,
உள்ளூராட்சி அமைச்சு, இரத்மலானை, 1969.7.24.

## விண்ணப்பப்படிவம்

### மேற்பார்வை ஓவசியர் பதவிகள் (தரம் 4)
### உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல், வடிகாலமைப்பு உள்ளூராட்சி வேலைகள் பகுதி

1. முழுப் பெயர் :————.
(தனித்த எழுத்தில்)
(அ) பெயர் :————.
(ஆ) மறுபெயர் :————.
2. தபால் முகவரி :————.
(தனித்த எழுத்துக்களில்)
3. பிறந்த திகதி :————.
23.8.1969 ல் சரியான வயது : வருடங்கள் :— மாதங்கள் :——
நாட்கள் :————.
4. தேசிய இனமும் எவ்வாறு பெறப்பட்டதென்பதும் :————.
(அ) பரம்பரையாக :————.
(ஆ) பதிவினால :————.
5. பிறந்த இடம் :————.
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரரின் தகப்பன்வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் தகப்பன்வழிப்பூட்டன் :————.
6. விண்ணப்பதாரரின் குடியியல் நிலை (விவாகமானவரா, தனிப் பட்டவரா ):————.
7. கல்வித்தகைமைகள் :————.
(சித்தியெய்திய உயர்ந்த பரீட்சை)
8. உயர்தொழில் , தொழில்நுட்பத் தகைமை ஏதாவது பெற்றிருந்தால், திகதிகளுடன் :————.
9. பாடசாலையை/கல்லூரியை விட்டநாள்முதல் பார்த்த தொழில், ஒப்பந்தத் திகதிகளுடன் :————.
10. மேற்பார்வை ஓவசியராகப் பெற்ற அனுபவம், விபரங்களுடன் :—
11. சிங்களத்திற் பெற்ற அதி உயர்ந்த தகைமையைக் கூறுக :————.
12. மூன்று நடுவர்களின் பெயர்; முகவரி, பதவி (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது):————.
13. 3 ஆம் பந்தியில் அறிவித்த எந்த வாசகத்தின் கீழ் தாங்கள் தகுதி உடையவர்களாக உரிமை கோருகிறீர்கள் :————.
14. மேலும் ஏதாவது விபரங்கள் இருப்பின் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன். இதில் கொடுக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் பிழையானவையாகவோ அல்லது உண்மையற்றவையாகவோ தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பிக்கத் தகுதியற்றவனாகக் கருதப்படுவேன் என்பதையும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்டஈடின்றி வேலைநீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :

8-333—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

## கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### இரத்தினக் கல் வெட்டுவதிலும் மினிக்குவதிலுமான போதனாசிரியர் பதவி

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்ப நிலையங்களில் இரத்தினக் கல் வெட்டுவதிலும் மினிக்குவதிலுமான போதனாசிரியர் பதவிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள, கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 1969 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி, கலாசசார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல மூலையில் " இரத்தினக் கல் வெட்டுவதிலும் மினிக்குவதிலுமான போதனாசிரியர் பதவி " எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும். காலியிடம் காலி கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தில் உண்டு.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாறுச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அனாதைகள் இளைப்பாறுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். நியமனம் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாறுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்கும் ஒருவர் இந்நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படின், அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்திற்கு பதில் நியமனமாக அமையும்.

3. விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும் :—

(i) 1969 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29 ந் திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதவராயும் 21 வயதுக்குக் குறையாதவராயும் இருக்க வேண்டும. (இவ் வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு அமையாது) ;

(ii) சிறந்த நலலொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும ;

(iii) (அ) சி. பா. த. பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

அல்லது

(ஆ) க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

அல்லது

(இ) சமனான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேணடும் ;

(iv) (அ) பிரிததானிய இரத்தினவியல் சபையால் இரத்தினவியலில வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருக்க வேணடும் ;

அல்லது

(ஆ) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேணடும் ;

(v) சிங்கள மொழியில் வகுப்புகளை நடாத்தக்கூடியவராய் இருக்க வேண்டும. அல்லது சிங்கள மொழியில் வகுப்புகளை நடாத்தக் கூடிய தேர்ச்சியை நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் பெற வேண்டும்.

**4. இப்பதவிக்குரிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு.**— ரூ. 3,420 — 4 × 120 — 8 × 180 — 5,340. ரூ. 4,080, ரூ. 4,800 ஆகிய வருடாந்தச் சம்பளங்களைத் தாண்டிச் செல்லுமுன் நியமதாரிகள் வினைத்திறனைக் காண் பரீட்சைகளில் தேறவேண்டும்.

**குறிப்பு.**—நியமிக்கபபடுவதற்குத் தெரிவு செய்யப்படுவோர் போதிய செயல்முறை அனுபவமும் படிப்பித்தல் அனுபவமும் அல்லது இவ்விரண்டினுள் எதையேனும் பெற்றிருக்க வேண்டும். எனினும, 5 வருடங்களுக்குக் குறைந்த கால அனுபவம் பெற்றுள்ள ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, வேண்டிய அனுபவத்தைப் பெறும்வரை அவருடைய நியமனம் பதில் நியமனமாக அமைவதுடன் வருடாந்தம் ரூ. 3,420 என்ற மாறாத சம்பளத்துடன் நியமிக்கப்படுவார்.

5. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர், அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளுமபடி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும், விண்ணப்பத்தின் ஒரு பிரதியை இவ்வமைச்சுக்கு நேரே அனுப்பி வைக்கவேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும்:—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. : சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பெற்றுள்ள அதியுயர்ந்த கல்வித் தராதரப் பத்திரமும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும் ;

(இ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள்.

**முக்கிய குறிப்பு.**—அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்கள் மேற்போந்த (இ) ம் உபபந்தியில் குறிப்பிட்டுள்ள நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை.

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும் ; எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

எனதெண் : பொ. நி/3/230,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 1 ந் உ.

## மாதிரி விண்ணப்பப்படிவம்

### கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**($8\frac{1}{2} \times 13\frac{1}{2}$ அங்குல அளவு கோடிட்ட முழுத்தாளில் தயாரிக்கப்பட வேண்டும்)**

### இரத்தினக் கல் வெட்டுவதிலும் மினிக்குவதிலுமான போதனாசிரியர் பதவி

(தொடரெண் : பொ. நி. /3/230)

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துக்களில்) : திரு/திருமதி/செல்வி : ————.

2. தபால் விலாசம் :————.
(விலாசத்தில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

3. சாதியம் :————.
(வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் எனக் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ளபடி வயது :
வரு. :————, மாதம் :————, நாள் :————.
(ஆ) பிறந்த திகதி :
வரு. :————, மாதம் :————, நாள் :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

5. பின்வருவோர் பிறந்த இடம் :————
(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

6. (அ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————.
(ஆ) விவாகம் செய்தவராயின், பின்வரும் விபரங்களைக் கொடுக்க:—
(1) விவாகத் திகதி :————.
(2) பிள்ளைகளின் எண்ணிக்கை :————.

7. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள், நிலையங்கள்

| பொதுக் கல்வி | | | உயர்தொழில் / தொழில்நுட்பக் கல்வி (யாதேனும் படித்திருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசிப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி :————.

8. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சையும் அதன் திகதியும் :
(அ) சிங்களத்தில் :————.
(ஆ) ஆங்கிலத்தில் :————.
(இ) தமிழில் :————.

9. உயர்தொழில் தகைமைகளும் தொழில் நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும்—(யாதேனும் பெற்றிருப்பின்) : ————.
(அ) அவைகள் பெற்ற திகதிகளும்; (ஆ) படித்த நிலையங்களும்: ————.

10. வாசிப்பு, எழுத்து, சம்பாஷணை, பேச்சு மொழிபெயர்ப்பு ஆகிய வற்றில் பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள தேர்ச்சி :—
(அ) சிங்களம் :————.
(ஆ) தமிழ் :————.
(இ) ஆங்கிலம் :————.

11. விசேட தகைமைகள் (அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விசேட தகைமைகளை / அனுபவத்தை அல்லது இவ்விரண்டினையும் பெற்றிருக்கிறீரா ? அங்ஙனமாயின், அவை பற்றிய விபரங்களையும் அவை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளையும் குறிப்பிடுக) :————.

12. சட்ட முறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி, (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

13. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு ? :————.

14. வேறு யாதேனும் விபரங்கள் (விசேட உரிமைகள் ஆதியன) :————

15. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (அத்தகைய பத்திரங்களின் பிரதிகள்—மூலப்படிகள் அல்ல—இணைத்தனுப்பப்பட வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலிருப்பவர்கள் இவ்விபரங்களைக் கொடுக்க வேண்டியதில்லை) :————.

16. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின்
(அ) படைக் கூற்றின் பெயர் :————.
(ஆ) வகித்த பதவி :————.
(இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

17. (அ) பாடசாலைகளிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் :————.
(i) வகித்த பதவிகள் :————.
(ii) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.
(iii) விலகியதற்கான காரணம் :————.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும், (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

18. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் :
(i) பதவிப் பெயரும் பதவியின் தரமும் :————.
(ii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா/ தற்காலிகமானதா/ சமயோசிதமா ? :————.
(iii) தற்போதைய (சகாயப் படிகள் உட்படாத) சம்பளமும் சம்பள விகிதமும் :————.
(iv) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

19. இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

இடம் :————.

திகதி :————.

8-548/1—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### மொழிகளிலும் பொதுப் பாடங்களிலும் (ஆங்கிலம்) போதனாசிரியர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்ப நிலையங்களில் மொழிகளிலும் பொதுப் பாடங்களிலும் (ஆங்கிலம்) போதனாசிரியர் பதவிகளுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 1969 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு பதிவஞ்சலில் அனுப்பப்பட வேண்டும். காகித உறையில் இடதுபக்க மேல்மூலையில் " மொழிகளிலும் பொதுப் பாடங்களிலும் (ஆங்கிலம்) போதனாசிரியர் பதவிகள் " என தெளிவாக எழுதப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். நியமனம் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்கும் ஒருவர் இந்நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படின், அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்திற்கு பதில் நியமனமாக அமையும்.

3. விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும் :—

(i) 1969 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29 ந் திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதவராயும் 21 வயதுக்குக் குறையாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு அமையாது) ;

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும் ;

(iii) (அ) ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு பின்வரும் பாடங்களில் குறைந்தபட்சம் இரண்டில், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும் ;
சிங்களம்/தமிழ், புவியியல், பொருளியல், கணிதம்.

அல்லது

(ஆ) பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் 3 பாடங்களில், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் ஆங்கில மொழிமூலம் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
புவியியல், பொருளியல், கணிதம், சிங்களம்/தமிழ்.

இதனுடன்

சி. பா. த. ப. பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி அல்லது க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் (" அ " ஆம் பாடத்திட்டத்தில்) ஆங்கிலத்தில் திறமைச்சித்தி அல்லது க. பொ. த. (உயர்தர) ப. பரீட்சையில் அல்லது மேற்றர பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும் ;

(iv) சிங்கள மொழியில் வகுப்புகளை நடாத்தக்கூடியவராய் இருக்க வேண்டும். அல்லது சிங்கள மொழியில் வகுப்புகளை நடாத்தக் கூடிய தேர்ச்சியை நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக் குள் பெற வேண்டும்.

**குறிப்பு.**—படிப்பித்தல் அனுபவம் மேலதிக தகைமையாகக் கணிக்கப் படும்.

4. **இப்பதவிக்குரிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வரு மாறு** :—ரூ. 3,420 — 4 × 120 — 8 × 180 — 5,340 . ரூ. 4,080 , ரூ. 4,800 ஆகிய வருடாந்தச் சம்பளங்களைத் தாண்டிச் செல்லுமுன் வினைத்திறமைகாண் பரீட்சையில் தேறவேண்டும்.

5. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. எனினும், விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தின் ஒரு பிரதியை இவ்வமைச்சுக்கு நேரே அனுப்பி வைக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாத னங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**மு. கு.** : சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிர மாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பெற்றுள்ள அதியுயர்ந்த கல்வித் தராதரப் பத்திரமும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும் ;

(இ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நிய மிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள்.

**முக்கிய குறிப்பு.**—அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்கள் மேற்போந்த (இ) ம் உபபந்தியில் குறிப்பிட்டுள்ள நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை.

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்க ளேனும் இவ்வமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும் ; எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தி யோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்ப தாரிகள், கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரிய தரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப் படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

எனதெண் : பொ. நி. 3/கே. ஏ./பீ.ஏ.–104/1,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1969 ம் ௵ ஓகஸ்ட் ௴ 1 ந் ௳.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**($8\frac{1}{2} \times 13\frac{1}{2}$ அங்குல அளவு கோடிட்ட முழுத்தாளில் தயாரிக்கப்பட வேண்டும்)**

**கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**மொழிகளிலும் பொதுப் பாடங்களிலும் (ஆங்கிலம்) போதனாசிரியர் பதவிகள்**

**(தொடரெண் : பொ. நி/3/பீ 1/கே. ஏ./பீ.ஏ.–104/1)**

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துகளில்) : திரு/திருமதி/செல்வி : ————.

2. தபால் விலாசம் :————.
(விலாசத்தில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

3. சாதியம் :————.
(வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் எனக் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி யன்று உள்ளபடி வயது :—
வரு. :————, மாதம் :————, நாள் :————.
(ஆ) பிறந்த திகதி :—
வரு. :————, மாதம் :————, நாள் :————.
(பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

5. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

6. (அ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————.
(ஆ) விவாகம் செய்தவராயின், பின்வரும் விபரங்களைக் கொடுக்க:
(i) விவாகத் திகதி :————.
(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை :————.

7. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள், நிலையங்கள் :—

| பொதுக் கல்வி | | | உயர்தொழில் /தொழில்நுட்பக் கல்வி (யாதேனும் படித்திருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசிப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி :————.

8. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சையும் அதன் திகதியும் :—.
(அ) சிங்களத்தில் :————.
(ஆ) ஆங்கிலத்தில் :————.
(இ) தமிழில் :————.

9. உயர்தொழில் தகைமைகளும் தொழில் நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும் (யாதேனும் பெற்றிருப்பின்) : ————.
(அ) அவைகள் பெற்ற திகதிகளும், (ஆ) படித்த நிலையங்களும் : ————.

10. வாசிப்பு, எழுத்து, சம்பாஷணை, பேச்சு மொழிபெயர்ப்பு ஆகிய வற்றில் பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள தேர்ச்சி :—

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

(இ) ஆங்கிலம் :————.

11. விசேட தகைமைகள் (அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விசேட தகைமைகளை/அனுபவத்தை அல்லது இவ்விரண்டினையும் பெற்றிருக்கிறீரா ? அங்ஙனமாயின், அவை பற்றிய விபரங்களையும் அவை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளையும் குறிப்பிடுக) :————

12. சட்ட முறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி, (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

13. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு ? :————.

14. வேறு யாதேனும் விபரங்கள் (விசேட உரிமைகள் ஆதியன) :————

15. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (அத்தகைய பத்திரங்களின் பிரதிகள்—மூலப்படிகள் அல்ல—இணைத்தனுப்பப்பட வேண்டும். எற்கனவே அரசினர் சேவையிலிருப்பவர்கள் இவ்விபரங்களைக் கொடுக்க வேண்டியதில்லை) :————.

16. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின்—
(அ) படைக் கூற்றின் பெயர் :————.

(ஆ) வகித்த பதவி :————.

(இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

17. (அ) பாடசாலைகளிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் :—
(1) வகித்த பதவிகள் :————.
(2) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.
(3) விலகியதற்கான காரணம் :————.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும், (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

18. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் :—
(i) பதவிப் பெயரும் பதவியின் தரமும் :————.
(ii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/சமயோசிதமா ? :————.
(iii) தற்போதைய (சகாயப் படிகள் உட்படாத) சம்பளமும் சம்பள விகிதமும் :————.
(iv) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

19. இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கைபொப்பம்.

இடம் :————.
திகதி :————.

8-548/2—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

---

எண். வெ. மு./3/121

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### ஐக்கிய சோவியத் சமூகவுடமைக் குடியரசில் செல்லுபடியான புலமைப் பரிசில்கள், 1969 ஆம் ஆண்டு

ஐக்கிய சோவியத் சமூகவுடமைக் குடியரசில் (பற்றிஸ் லுமும்பா நட்புரிமைப் பல்கலைக் கழகத்திலும் ஐ. சோ. ச. குடியரசிலுள்ள உயர் கல்வி நிலையங்களிலும்) செல்லுபடியான பட்டப்பின் மட்டத்திலான அல்லது பட்டமுன் மட்டத்திலான புலமைப் பரிசில்கள் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டப்பின் மட்டத்திலான படிப்புத் துறைகளில் எவ்வித மட்டுப்பாடுமில்லை. பட்டமுன் மட்டத்திலான புலமைப் பரிசில்களைப் பொறுத்தவரையில் பின்வரும் துறைகளில் மட்டுமே பயில்வதற்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :—

1. எந்திர அமைப்பு
2. வலு எந்திர அமைப்பு
3. குடிசார் எந்திரவியல்
4. பொறிமுறை எந்திரவியல்
5. புவிச்சரிதவியலும் இட ஆய்வும்
6. சுரங்க வேலை.

தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப் புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு 1**—பட்டமுன் புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பங்கள் பின்வருவோரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
(i) நிரந்தர பதவிகளை வகிப்பவர்களும் நியமனங்களில் உறுதிப் படுத்தப்பட்டவர்களுமான அரசாங்க ஊழியர்கள்.
(ii) சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இவைபோன்ற நிலையங்கள் ஆகியவற்றில் நிரந்தர பதவிகளை வகிப்பவர்களும் தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டவர்களுமானவர்கள்.
(iii) இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் யாதேனும் பயிற்சி நெறியைப் பின்பற்றுபவர்கள்.

**குறிப்பு 2**—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமைபுரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ஆந் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச் சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினதும் (பட்டப்பின் புலமைப் பரிசிலுக்கான) விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு 3**—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் (பட்டப்பின் புலமைப் பரிசிலுக்கான) விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

**குறிப்பு 4**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

**2. கால எல்லை.**—பட்டப்பின் பயிற்சி நெறிகளுக்கான புலமைப் பரிசில்கள் சாதாரணமாக 2—3 வருடங்களாகவும் பட்டமுன் பயிற்சி நெறிகளுக்கான புலமைப் பரிசில்கள் 5—6 வருடங்களாகவும் அமையும். பட்டமுன் புலமைப் பரிசில்களுக்கான மாணவர்கள் ஐ. சோ. ச. குடியரசுக்கு 1.9.69 அளவிலும், பட்டப்பின் புலமைப் பரிசில்களுக்கான மாணவர்கள் 1.10.69 அளவிலும் போகவேண்டும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு ஐ. சோ. ச. குடியரசு அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

**3. தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—
(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.
(ii) ஆங்கிலத்தில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.
(iii) பட்டப்பின் புலமைப் பரிசில்கள் பெறுபவர்கள் 1.9.69 அன்று 35 வயதுக்குட்பட்டவர்களாகவும் பட்டமுன் புலமைப் பரிசில பெறுபவர்கள் 1.9.69 அன்று 22 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.
(iv) (அ) பட்டப்பின் புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிப்பவராயின் விரும்பும் பயிற்சி நெறிக்கு பொருத்தமுடைய பாடங்களில், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
(ஆ) பட்டமுன் புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிப்பவராயின்—க. பொ. த. சாதாரணதரப் ப. பரீட்சையில், ஒரே முறையில் தோற்றி 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் ; அதே முறையில் குறைந்தபட்சம் 5 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும். இவ்வைந்து பாடங்களுள் பௌதிகம், இரசாயனம், கணிதம் (தூய அல்லது பிரயோக அல்லது உயர்தர) ஆகியவையும் அடங்கவேண்டும்.

**குறிப்பு 1**—க. பொ. த. (உயர்தர) பத்திரம் அல்லது அதுபோன்ற அல்லது உயர்ந்த தகமைகள் வேறு யாதேனும் பரீட்சையில் பின்னர் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள ஆகக்குறைந்த தகைமைகளைக் கட்டாயம் பெற்றி ருக்க வேண்டும்.

**குறிப்பு 2**—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத் தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறிசெய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப் பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.9.69 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 3**—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் இவ் வளிப்புகளுக்குத் தெரிவுசெய்யப்படுமிடத்து தங்கள் பதவிகளைத் துறப்பதற்குச் சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப் பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15(ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) ஐ. சோ. ச. குடியரசுக்குப் போவதற்கும் புலமைப் பரிசிலைச் சித்தி கரமாக முடித்தபின் திரும்பி வருதற்கும் பயணச் செலவு.

(ஆ) இலவச கற்கை.

(இ) ஒரு புலமைப் பரிசில் கொடை.

(ஈ) விடுதி வசதி.

(உ) இலவச மருத்துவ சிகிச்சை.

**குறிப்பு.**— பட்டப்பின் புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் இவ்வமைச்சில் 20.8.69 அன்று (போயா தினம்) மு. ப. 9.00 மணிக்கு ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகிய வற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், செல்லு முன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாச மாகவும், விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத் துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்ப ளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத் துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஐக்கிய சோவியத் சமூகவுடமைக் குடியரசிற்குக் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தி யர் சபையினால் நடாத்தப்படும் வைத்தியப் பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க ஊழியர் களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் அவர்கள் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் புலமைப் பரிசிலைப் பூர்த்தி செய்துகொண்டு திரும் பியபின் அவர்களுக்கு உத்தியோகம் அளித்தற்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரமீ யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவ ராக்கப்படுதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீட்கப் படுவதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக்கொள்ளுதல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நிய மனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமை யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத் தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியால் நேரடியாக 20.8.69 அன்று (போயா தினம்) மு.ப. 9.00 மணிக்கு கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் வெளி முகவராண்மைக் கிளைக்கு கொண்டுவரப்படுவதுடன் அதே தினம் உடனே விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும்.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10/– பெறுமதி யான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10/– பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப் பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது பகுதித் தலைவர்களின் விதப்புரைகளையும் சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல் கலைக் கழகங்கள், அரசினர் உதவிபெறும் அல்லது அரசினர் ஆதிக்கத்தி லுள்ள நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிலையத் தலைவர் களின் விதப்புரைகளையும் மெழுகு ஊற்றிப் பொறியிடப்பட்ட காகித உறைகளில் நேரடியாகக் கொண்டு வரவேண்டும். விண்ணப்பதாரி பதவியைத் துறக்க ஆயத்தமாயிருப்பினும் இந்நிபந்தனை அமையும்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய்வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 1 ந் உ.

8-508—8.8.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,866

---

## இலங்கைத் தொழிநுட்பவியற் கல்லூரி கட்டுப்பெத்த—மொறட்டுவ

### தன்னசைவு எந்திரவியல் போதனாசிரியர் பதவி—தரம் II

இலங்கைத் தொழிநுட்பவியற் கல்லூரி கட்டுப்பெத்த, மொறட்டுவவில் தன்னசைவு எந்திரவியல் போதனாசிரியர் பதவி—தரம் II இற்கு கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்ட மாதிரிப் படிவங்களில் தயாரிக்கப்பட்டு 28.8.1969 இல் அல்லது இத் திகதிக்கு முன் எனக்குக் கிடைக்க வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தர மானது; இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையது. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குப் பணம் செலுத்த வேண்டும். நியமனம் மூன்று வருடத்திற்குத் தகுதிகாண் முறையில் அமையும். இதற்கு ஏற்கனவே அரசாங்கத்தில் நிரந்தரமான, இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய பதவி வகிப்பவர் தெரிவு செய்யப்படின், அவரின் நியமனம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பதில் நியமனமாக அமையும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் உடையவர் எனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும்.

(i) 28.8.1969 இல் 40 வயதுக்கு மேற்படாமலும் 21 வயதுக்குக் குறையாமலும் இருக்கவேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்போருக்கும் இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமை யாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) (அ) சி. பா. த. பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவேண்டும் ; அல்லது,

(ஆ) க. பொ. த. (சாதாரண தரம்) பத்திரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் தோற்றி சிங்களம்/தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் ; அல்லது,

(இ) சமானமான அல்லது உயர் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(iv) (அ) கனிட்ட தொழினுட்ப உத்தியோகத்தர் (மின். பொறி) பத்திரம் பெற்றவராய் இருத்தல் வேண்டும் ; அல்லது,

(ஆ) பொறிமுறை எந்திரவியலில் இலங்கைத் தொழிநுட்பவியற் கல்லூரியால் வழங்கப்படும் மாலை நேர எந்திரவியல் தராதரப்பத்திரம் பெற்றவராய் இருத்தல் வேண்டும் ; அல்லது,

(இ) சமானமான அல்லது உயர்ந்த தகைமையுடையவராய் இருத்தல் வேண்டும்.

(v) சிங்கள மொழியில் கற்பிக்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும். அல்லது நியமனத்திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்கள மொழியில் கற்பிக்கக்கூடிய தேர்ச்சியைப் பெறவேண்டும்.

(vi) 5 வருட செயல்முறை அனுபவம்/அல்லது படிப்பித்தல் அனுபவமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

4. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பளத்திட்டம் ரூபா 3,420—120 × 4—180 × 8—5,340 ஒரு வருடத்திற்கு. (வருடாந்தச் சம்பளங்கள் ரூபா 4,080, 4,800 ஆகியவற்றிற்கு மேல் செல்லமுன் வினைத்திறமைகாண் பரீட்சை உண்டு.)

5. அரசாங்க சேவையில் உள்ள தகுதிவாய்ந்த பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் அவர்களின் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபாரிசு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்து அனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப்பத்திரம் (**மு. கு.** : சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பெற்றுள்ள அதியுயர்ந்த கல்வித் தராதரப் பத்திரமும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும்.

(இ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம் இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகாலத்து நற்சாட்சிப்பத்திரங்கள்.

**மு. கு.** : அரசாங்கத்தின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்கள் உப பந்தி (இ) இல் குறிப்பிட்டுள்ள நற்சாட்சிப்பத்திரங்களை அனுப்பவேண்டியதில்லை.

7. விண்ணப்பங்களும், உரிய சாதனங்களும் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அதிபர், இலங்கைத் தொழிநுட்பவியற் கல்லூரி, கட்டுப்பெத்த, மொறட்டுவா என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படும். இத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள், அதிபர், இலங்கைத் தொழிநுட்பவியற் கல்லூரிக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

எல். எச். சுமணதாச,
அதிபர்,
இலங்கை தொழினுட்பவியற் கல்லூரி.

இலங்கை உயர்தொழில்நுட்பக் கல்லூரி,
கட்டுப்பெத்தை,
மொறட்டுவா,
31.7.1969.

## விண்ணப்பப் படிவம்

**இலங்கைத் தொழிநுட்பவியற் கல்லூரி**

**தன்னசைவு எந்திரவியல் போதனாசிரியர் பதவி—தரம் I**

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்தில்) : ———.

2. தபால் விலாசம் : ———.
(விலாசத்தில் யாதேனும் மாற்றம் ஏற்பட்டால் உடனே அறிவிக்க வேண்டும்)

3. தேசிய இனம் : ———.
(வம்சாவழி காரணமாகவோ, பதிவு காரணமாகவோ இலங்கையர் எனக் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் அதன் திகதியையும் குறிப்பிடுக.)

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ள வயது :
வருடம் : ———. மாதம் : ———. நாள் : ———.
(ஆ) பிறந்த திகதி :
வருடம் : ———. மாதம் : ———. நாள் : ———.
(பிறப்புச் சான்றிதழை இணைக்கவும்)

5. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி : ———.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ———.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பாட்டன் : ———.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பூட்டன் : ———.

6. (அ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ———.
(ஆ) விவாகம் செய்தவராயின் பின்வரும் விபரங்களைக் கொடுக்க :—
(i) விவாகம் செய்த திகதி : ———.
(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை : ———.

7. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள், கல்வி நிலையங்கள் :—

| பொதுக் கல்வி | | | உயர்தொழில்/தொழிநுட்பக் கல்வி (இருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசிப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி : ———.

8. கல்வித் தகைமைகளும், கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சையும் அதன் திகதியும் :—
(அ) சிங்களம் : ———.
(ஆ) தமிழ் : ———.
(இ) ஆங்கிலம் : ———.

9. உயர்தொழில் தகைமைகளும்/அல்லது தொழிநுட்பத் தகைமைகளும் (யாதேனும் பெற்றிருப்பின்) : ———.
(அ) அவைகள் பெற்ற திகதிகள் : ———.
(ஆ) படித்த நிலையங்கள் : ———.

10. வாசிப்பு, எழுத்து, சம்பாஷணை, மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள தேர்ச்சி : —.
(அ) சிங்களம் : ——. (ஆ) தமிழ் : ——. (இ) ஆங்கிலம் : ——.

11. **விசேட தகைமைகள் :** அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விசேட தகைமைகளை/அனுபவத்தை அல்லது இவ்விரண்டினையும் பெற்றிருக்கிறீரா ? அங்ஙனமாயின் அவைபற்றிய விபரங்களையும் அவை பெற்றுக்கொள்ளப்பட்ட திகதிகளையும் குறிப்பிடுக : ———.

12. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின், (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி, (ஆ) வழக்கு எண் (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக : ———.

13. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின் எவ்வளவுக்கு ? : ———.

14. வேறு யாதேனும் விபரங்கள் (விசேட உரிமைகள் ஆதியன) : ——.

15. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்தவர்களின் பெயர்களும், பதவிகளும் (அத்தகைய பத்திரங்களின் பிரதிகள்—மூலப் பத்திரங்கள் அல்ல—இணைக்கப்பட வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்போர்கள் இவ்விபரங்களைக் கொடுக்க வேண்டியதில்லை) : ————.

16. முன்னர் யாதேனும் படையில் சேவைபுரிந்து விலகியவராயின்,
(அ) படைக்கூற்றின் பெயர் : ————.
(ஆ) வகித்த பதவி : ————.
(இ) சேர்ந்த விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

17. (அ) பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் : ————.
(i) வகித்த பதவிகள் : ————.
(ii) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
(iii) விலகியதற்கான காரணம் : ————.
(ஆ) அரசாங்கத்தின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர் ? சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம் (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடுக : ————.

18. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் :————.
(i) பதவியின் பெயரும் தரமும் : ————.
(ii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/சமயோசிதமா ? : ————.
(iii) தற்போதைய (சகாயப்படிகள் உட்படாத) சம்பளமும் சம்பள விகிதமும் : ————.
(iv) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

19. இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதி அளிக்கிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுவதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

இடம் : ————.
திகதி : ————.

8–497—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

---

## கல்வி கலாச்சார அமைச்சு

### புற போதனாசிரியர் பதவிகள்—கனிஷ்ட தொழில் நுட்பக் கல்வி நிலையம், அனுராதபுரம்—1969–70

கல்வி, கலாச்சார அமைச்சின் கீழுள்ள அனுராதபுரம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்வி நிலையத்திலுள்ள புறபோதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுராதபுரம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்வி நிலைய அதிபருக்கு 1969.8.31 க்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். கல்வித் தகைமைகள், தொழில் நுட்பத்தகைமைகள், உயர் தொழில் தகைமைகள், அனுபவம் ஆகியவை பற்றிய சகல விபரங்களையும் அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களில் குறிப்பிட வேண்டும்.

2. எப்பாடங்களில் புற போதனாசிரியர்களுக்கான காலியிடங்கள் நிலவுகின்றனவோ அப்பாடங்கள் கீழே தரப்பட்டுள்ளன. வகுப்புகள் நடாத்தப்படும் போதனாமொழி ஒவ்வொரு பாடத் தொகுதிகளுக்கெதிரே காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. சிங்கள மொழி<br>2. ஆங்கில மொழி<br>3. காய்ச்சி இணைத்தல்<br>4. தச்சுவேலை வரைதல்<br>5. குழாயமைப்பு, தொழில்நுட்பவியல், பயிற்சி<br>6. மின்கம்பி இணைத்தற்றொழில் நுட்பவியலும் பயிற்சியும்<br>7. வானொலி பழுதுபார்த்தற்றொழில்நுட்பவியலும் பயிற்சியும்<br>8. ஆரம்ப விஞ்ஞானம் | சிங்கள மொழி மூலம் |
| 9. கேத்திர கணிதவடிவ, பொறி முறைவரைதல்<br>10. கணிதம்<br>11. வெப்பவியல், ஒளியியல், ஒலியியல்<br>12. மின்னியலும் காந்தவியலும் | ஆங்கில மொழி மூலம் |

3. புற போதனாசிரியர்களுக்கான கட்டணங்கள், அவர்களின் தகைமைகள்/அனுபவம் அவர்கள் படிப்பிக்கும் வகுப்புகள் ஆகியவற்றிற்கு அமைய மணித்தியாலம் ஒன்றுக்கு ரூபா 5 (ஐந்து) தொடக்கம் ரூபா 15 வரை மாறுபடும்.

4. நியமனம் இவ்வருடம் ஒக்டோபர் மாதம் தொடக்கம் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் வரையுள்ள காலத்துக்கானதாகும். அவசியம் ஏற்படின் முன் கூட்டியே அவர்களின் சேவை நிறுத்தப்படலாம்.

5. வகுப்புகள் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.30 மணி வரையும் பி. ப. 5 மணி தொடக்கம் பி. ப. 7.15 மணிவரையும் நடைபெறும். விதிக்கப்பட்ட இந் நேரங்களில் படிப்பிக்க ஆயத்தமாய் இருப்பவர்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே சீர்தூக்கப்படும். விண்ணப்பதாரிகள் அவர்களுக்குப் படிப்பிக்க வசதியாகவுள்ள நேரத்தை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

6. உள்ளகப் பரீட்சகர்கள் அல்லாதவர்கள் அமர்த்தப்படாத வருடாந்த இடைமானிப் பரீட்சைகளிலும் இறுதிப் பரீட்சைகளிலும் மேலதிக வேதனமின்றி அவர்களுடைய வகுப்புகளிலுள்ள மாணவர்களை புற போதனாசிரியர்கள் பரீட்சிக்க வேண்டும்.

7. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் பகுதித் தலைவர் மூலம் அனுப்பப்படவேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்கு முன் அதிபரால் பெற்றுக்கொள்ளப்படாத விண்ணப்பங்கள், விண்ணப்பம் உரிய திகதிக்கு முன் பகுதித் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டதென்றும் தாமதத்திற்குத் தகுந்த காரணம் காட்டப்பட்டாலுமன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. எப்பாடம் தொடர்பில் விண்ணப்பம் செய்யப்படுகிறதென விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடுதல் மிகவும் முக்கியமெனக் கவனிக்கவும்.

எல். பீ. குணசேகர,
கல்வி அதிபர்,
வடமத்திய மா நிலம்,
அனுராதபுரம்.

கல்வித் திணைக்களம்,
அனுராதபுரம்.

8–531—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

---

## நில அளவைத் திணைக்களம்

### இயந்திரத் தொழில் முதல்வன் பதவி

நில அளவைத் திணைக்களத்தில் இயந்திரத் தொழில் முதல்வன் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்களைத் தயாரித்து 1969 ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ம் திகதியன்றோ அன்றேல் அதற்கு முன்னதாகவோ நில அளவையாளர் நாயகம் (பரிபாலனக் கிளை) என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

2. **சேவை ஒப்பந்தமும் நியமன நியதிகளும்.**—(அ) இப்பதவி நிரந்தரமானது. ஆனால் இளைப்பாற்றுச் சம்பளமற்றதாகும். உத்தியோகத்தர் சம்பளத்தில் 5% அரசாங்க சேவை சகாய நிதிக்குக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். (இப்பதவியை இளைப்பாற்றுச் சம்பளமுடையதாக்குவதற்காய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்பின், விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும்).

(ஆ) இப்பதவி 3 வருடங்களுக்கும் நியமன உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்படும் வரைக்கும் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும்.

அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவியிலிருப்பவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இந்நியமனம் பதில் சேவை நிலையிலிருக்கும்.

அரசாங்கம் அவருக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒழுங்கு செய்யும் பயிற்சியின் திருப்திகரமான முடிவிலும், திருப்தியான சேவையிலும், தகுதிகாண் நிலையின் போதோ அல்லது பதில் சேவை நிலையின் போதோ, அவ்வவற்றிற்கேற்ப கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களிலும், 4.9.66ன் திறைசேரிச் சுற்றறிக்கை இலக்கம் 701ன் பிரகாரம் விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையின் பெறுபேற்றிலுந்தான் நியமன உறுதிப்படுத்தல் தங்கியுள்ளது.

(இ) (1) தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி தீவின் எப்பாகத்திலாயினும் சேவை செய்வதற்கேற்ற உடல் வலிவுடையவரென்பதை நிறுவுவதற்காக கண் பார்வை, சாதாரண நிறத் தோற்றம், திண்ம அச்சுக்கோப்பு முதலியவற்றை உள்ளடக்கிய வைத்தியப் பரிசோதனையொன்றில் தேர்வு

காண வேண்டும். வெளிநாட்டில் பயிற்சி பெறுதற்கேற்ற உடல் வலிவுடையவரென்பதையும் நிறுவுவதற்காக, பணிக்கப்படும் பொழுது வேறொரு வைத்தியப் பரிசோதனையிலும் தேர்வு காண வேண்டும்.

(2) ஏனைய விஷயங்களுள், அவருக்கு அளவை, அதனோடு தொடர்புடைய கருவிகளைச் செப்பமிடுதல், பேணுதல், திருத்துதல் போன்ற வற்றில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அரசாங்கத்தால் ஒழுங்கு செய்யப்படும் பயிற்சியை, நேர்மையாக, ஊக்கமாக, திருப்தியாக செய்து முடிக்கப் பொறுப்பேற்பதாகவும் பயிற்சியை முடித்தபின், தேவைப்படும் பொழுது, குறிப்பிட்ட காலத்துக்கு (கால வரை அரசாங்கத்தால் கணிக்கப்படும்) இயந்திரத் தொழில் முதல்வனாக அரசாங்கத்தில் சேவை செய்வதாகவும் உடன்படிக்கையொன்றை அரசாங்கத்துடன் செய்து கொள்ள வேண்டும்.

(3) அவர் அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமான பதவியில் ஏற்கனவே இல்லாதிருந்தால், உடன்படிக்கை ஒப்பந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டிருக்கத் தவறினால், பயிற்சியின் முழுச் செலவையும் அரசாங்கத்துக்குத் திருப்பியளிப்பதற்குப் பொறுப்பேற்பதாக ஒவ்வொன்றும் ரூபா 35,000 பெறுமதியான இருப்புச் சொத்துள்ள அங்கீகரிக்கப்பட்ட இரண்டு பிணையாளர்களுடன் உடன்படிக்கையொன்றை அரசாங்கத்துடன் செய்துகொள்ள வேண்டும். சம்பளங்களும், படிகளும், பிரயாணச் செலவுகளும், படிப்புக் கட்டணங்களும், மற்றும் அரசாங்கத்தினாலும், வெளிநாட்டு முகவர் நிலையங்களாலும் மேற்கொள்ளப்படும் செலவுகளும் பயிற்சிச் செலவில் அடங்குவனவாகும்.

(4) அவர் அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமான பதவியில் ஏற்கனவே இருந்திருந்தால், உடன்படிக்கை ஒப்பந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டிருக்கத் தவறினால், முற்கூறியபடி, பயிற்சியின் முழுச் செலவையும் அரசாங்கத்துக்குத் திருப்பியளிப்பதற்கு பொறுப்பேற்பதாக ஆட்பிணை முறியொன்றை அரசாங்கத்துடன் செய்துகொள்ள வேண்டும்.

(5) விண்ணப்பதாரி இயந்திரத் தொழில் முதல்வனாக நியமனம் பெற்ற திகதியிலிருந்து இவ்வுடன்படிக்கை பயனுடையதாகவிருக்கும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குக் கொடுக்கப்படும் சம்பள விகிதம் பின்வருமாறு :—வருடம் ரூபா 2,820 லிருந்து ரூபா 5,340 வரை 9 தடவை 120 ரூபா வீதமும் 8 தடவை 180 ரூபா வீதமும் வருடத்துக்கு ரூபா 4,080 ஆவதற்குமுன் முட்டறுப் பரீட்சை உண்டு. (தெரிவு செய்யப்பட்டவர் அரசாங்க சேவையில் நிரந்தரமான நியமனத்திலிருப்பவரானால் அவருடைய சம்பளம் நிதிப் பிரமாணம் 1, 120 க்கு அமைய ஏற்ற நிலையில் வைக்கப்படும்).

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கீழுள்ளவற்றில் திருப்தியான சான்றுகள் வழங்க வேண்டும் :—

(அ) நல்லொழுக்கமுடையவராகவும் திடகாத்திரமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். (பந்தி 2 (இ) (1) ஐப் பார்க்கவும்).

(ஆ) 5.9.69 ல் 20 வயதுக்குட்பட்டவராக இல்லாமலும் 30 வயதுக்கு மேற்பட்டவராக இல்லாமலும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் பரீட்சார்த்திகளுக்கு வயதுக் கட்டுப்பாட்டு நியதி இல்லை).

(இ) கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் :—

(1) பொதுத் தராதரப் பத்திரப்பரீட்சை (சாதாரண நிலை) யில் ஆரம்ப கணிதம், பௌதீகம் ஆகியவற்றில் சிறப்புச் சித்தியும், சிங்களம்/தமிழ்/ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தியும் உட்கொண்ட ஆறு பாடங்களில் இருமுறைக்கு மேற்படாது தோற்றிச் சித்தியெய்தியும்,

(2) கட்டுப்பெத்தையிலுள்ள செய்முறைத் தொழில்நுட்ப நிறுவனத்தில் 3 வருடகாலம் (பகுதி நேர) தொழிற் பொறியியல் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தமைக்கான பத்திரத்தையோ அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அதற்குச் சமமான 2 வருட வேலைக்களப் பயிற்சிப் பத்திரமும்.

(விண்ணப்பதாரர் ஆங்கிலத்தில் சித்தியடைந்திருத்தல் அவர்கள் வெளிநாட்டுப் பயிற்சி நிலையத்திற்குச் செல்ல விஷேடமாகக் கவனிக்கப்படும்).

(3) எப்படியாவது, இந்த வேண்டுகோளின்படி அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலையில் அல்லது வேலைத்தலங்களில் அல்லது இந்தத் திணைக்களத்தில் குறிக்கப்பட்டுள்ள 6 வருட அனுபவங்கள் நிறைவடையும் வரை, நேராக தெரிவு செய்யப்பட்டவர்களாக இருந்தால், சம்பள அளவுத் திட்டத்திலும் ஆரம்ப சம்பளத் திட்டத்திலும் அரசாங்க சேவையில் நிரந்தரமான நியமனத்திலிருப்பவரானால் அவருடைய சம்பளம் நிதிப்பிரமாணம் 1, 120 க்கு அமைய ஏற்ற நிலையில் வைக்கப்படும்.

**குறிப்பு.**—நில அளவைப் பகுதி உபகரணக் கிளையில் வேலைசெய்யும் ஆட்டிபைசர்ஸ் அல்லது தலைமை ஆட்டிபைசர்ஸ்களில், குறைந்த கல்வித் தகைமையாகிய, கனிஷ்ட தராதரப் பத்திரம் பெற்று, அங்கீகரிக்கப்பட்ட தொழிற் சங்கங்களிலோ அல்லது வேலைத்தலங்களிலோ 12 வருட அனுபவம் பெற்றவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும். மேற்பார்வை செய்வதிலுள்ள அனுபவம் ஓர் மேலதிக தகைமையாகும்.

5. கேட்கப்படும் பொழுது பரீட்சார்த்திகள் கீழேதரப்பட்ட ஏதாவதொரு அல்லது எல்லாப் பத்திரங்களையும் காட்டுவதற்குப் பணிக்கப்படுவார்கள்.

(அ) பிறப்புப் பதிவின் அத்தாட்சிப் பத்திரம் ;

(**குறிப்பு.**—ஞானஸ்நானப் பத்திரமோ அல்லது உதவிப் பாடசாலைகளின் நிபந்தனைகளுக்கேற்ப வழங்கப்பட்ட பிறப்புப் பத்திரமோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) ஒழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு ; (அவற்றுள் ஒன்று கடைசியாகப் பயின்ற பாடசாலையின் அதிபரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்) ;

(ஈ) தொழிலோ அல்லது நுண்கலைத் தகைமைபற்றியோ பெற்ற பத்திரங்கள் ;

(உ) தொழிலில் பெற்ற பழைய அனுபவங்கள் பற்றிய பத்திரங்கள் ;

(ஊ) சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் சித்தியெய்தியமைக் காகப் பெற்ற உயர் பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு**

(1) கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பத்தில் குறிக்கப்பட்ட பத்திரங்களின் பிரதிகள் (மூலங்களல்ல) விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்.

(2) பத்திரங்களின் மூலங்களைக் கேட்கப்படும்பொழுது காட்ட முடியாத பரீட்சார்த்திகளது விண்ணப்பங்கள் கருதப்படமாட்டாது.

(3) துணைப் பிரிவு (இ) யின் கீழுள்ள பத்திரங்கள், ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகளிடமோ அல்லது 4 வது பந்தியின் கீழுள்ள " குறிப்பில் " உள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்தோ தேவைப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலிருப்பவர்கள் தங்களது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். அதில் ஒரு பிரதியை முடிவு திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக நில அளவையாளர் நாயகம் (பரிபாலனக் கிளை) என்ற முகவரிக்கு நேராக அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களை நில அளவையாளர் நாயகத்துக்கே அனுப்புதல் வேண்டும். திணைக்களத்திலுள்ள வேறு எந்த அலுவலர்கட்கும் நேரடியாக அனுப்பப்படக் கூடாது.

8. அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I, பிரிவு II ன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

9. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமைக்கான அறிவித்தல்கள் அனுப்பப்படும். 11.9.1969 க்கு முன் அத்தகைய அறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் உடனடியாக நில அளவையாளர் நாயகத்துக்கு அதுபற்றி அறிவிக்கவேண்டும். இதில் தவறும் விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகள் எதுவும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

சி. ரி. குணவர்த்தன,
பதில் நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் அதிபதி அலுவலகம்,
கிளை " பரிபாலனம் ",
த. பெ. எண். 506,
கொழும்பு 5,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 31 ந உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**குறிப்பு.**—எல்லா வினாக்களுக்கும் விடையிறுக்கப்படல் வேண்டும். கூடுகளெவையும் வெறுமையாக விடப்படலாகாது. கீறுகளெவையும் விடையாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**நில அளவைத் திணைக்களம்**

**இயந்திரத் தொழில் முதல்வன் பதவி**

1. முழுப்பெயர் (தனிப்பேரெழுத்துக்களில்) : ————.

2. அஞ்சல் முகவரி : ————.

(முகவரியில் ஏதாவது மாற்றமேற்படின் உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும்)

3. தேசியமும் சாதியும் : ————.

(வம்சாவழி காரணமாகவா அல்லது பதிவு காரணமாகவா இலங்கையர் என்பதைக் குறிப்பிடுக. பதிவினால் இலங்கைக் குடியாயின் பதிவுப் பத்திரத்தின் இலக்கத்தையும் திகதியையுங் குறிப்பிடுக)

4. (அ) 1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ந் திகதியில் சரியான வயது —

வருடம் ———. மாதம் : ———. நாள் : ———.

(ஆ) பிறந்த திகதி : ———.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

5. பின்வருவோர் பிறந்த இடம் —

(அ) விண்ணப்பதாரி : ———.

(ஆ) அவருடைய தந்தை : ———.

(இ) அவருடைய தந்தைவழிப் பாட்டன் : ———.

(ஈ) அவருடைய தந்தைவழிப் பூட்டன் : ———.

6. விவாகம் செய்தவரா ? : ———.

அப்படியாயின் பிள்ளைகளின் எண்ணிக்கை : ———.

7. சித்தியெய்திய பரீட்சைகள்—

(அ) பாடசாலை அல்லது கல்லூரியின் பெயர் : ———.

(ஆ) பரீட்சையின் பெயர் : ———.

(இ) மாதமும் வருடமும் : ———.

(ஈ) பரீட்சை நிலையமும் சுட்டு இலக்கமும் : ———.

(உ) சித்தியெய்திய பாடங்கள் : ———.
(திறமைச் சித்தியா, சாதாரண சித்தியா என்பதைக் குறிப்பிடுக)

(ஊ) உயர்ந்த கல்வித் தகைமைகள் —

சிங்களம் : ———.

தமிழ் : ———.

ஆங்கிலம் : ———.

(எ) பாடசாலையிலிருந்து விலகிய திகதி : ———.
(தகைமைப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்)

(ஏ) பெற்றுக்கொண்ட தொழில்நுட்ப அல்லது வியாபாரத் தகைமைகள் —

பரீட்சை : ———.

நிறுவனம் : ———.

ஆண்டு : ———.
(தகைமைப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்)

8. பாடசாலையிலிருந்து விலகிய காலந் தொடக்கம் தொழிற்சாலைகளிலோ அல்லது வேலைக்களங்களிலோ செய்த தொழில்களையும் அனுபவங்களையும் விபரமாகத் தரவும் —

(அ) நிறுவனத்தின் பெயர் : ———.

(ஆ) சேவையின் ஆரம்பத்திலும் முடிவிலும் உள்ள சம்பளம் : ———.

(இ) வேலையின் விபரம் : ———.

(ஈ) சேவைக் காலம் —

வருடம் : ———. மாதம் : ———.

(உ) வேலை நீக்கத்தினதோ அன்றேல் முடிவினதோ காரணந்தரவும். தகைமைப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும், சேவைகளில் துண்டிப்பு ஏதுமிருப்பின் காரணந் தருக : ———.

9. சிறப்புத் தகைமைகள் ஏதாவது இருப்பின் அவற்றின் விபரங்கள் : ———.

10. ஏதாவது குற்றத்திற்காக சட்டமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருப்பின் அல்லது குற்றவாளியாகக் கருதப்பட்டிருந்தால் —

(அ) திகதி : ———.

(ஆ) வழக்கு இலக்கம் : ———

(இ) வழக்கு மன்றப் பெயர் : ———.

(ஈ) சாட்டப்பட்ட குற்றத்தின் இயல்பு : ———.

(உ) குற்றவாளியாகக் கண்டிருப்பின் தண்டனையின் இயல்பு : ———.

11. தற்போதைய தொழிலின் விபரம் —

(அ) நிறுவனத்தின் அல்லது அரசாங்கத் திணைக்களத்தின் பெயர் : ———.

(ஆ) சேர்ந்த திகதி : ———.

(இ) தரம் : ———.

(ஈ) சம்பளத் திட்டமும் தற்போதைய அடிப்படைச் சம்பளமும் : ———.

(உ) நிரந்தரமானதா/தற்காலிகமானதா : ———.

(நில அளவைத் திணைக்களத்தில் பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் இத்தகவல்களைத் தரத் தேவையில்லை).

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்களனைத்தும் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதிப் படுத்துகிறேன். இங்கே தரப்பட்டிருக்கும் விபரங்களில் ஏதாவது பொய்யானதாகவும் பிழையானதாகவும் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டால் தேர்வுக்கு முன்னதாக நான் தகைமையற்றவனாகக் கணிக்கப்படுவேனென்பதும் நியமிக்கப்பட்ட பின்னரானால் நியமன உடன்பாட்டு இணைப்பின் பிரகாரம் அதில் குறிக்கப்பட்டுள்ள தண்டனைகளுக்கு ஆளாவதுடன் நட்டஈடு எதுவுமின்றி வேலையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதும் தெரியும்.

முகவரி : ———.

திகதி : ———.

———
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் இருப்பவரானால் இப்பகுதி நிரப்பப்படல் வேண்டும்.

11 ம் கூட்டில் இருக்கும் கூற்று சரியானது என்றும் அவருடைய சேவை ஆரம்ப முதல் திருப்திகரமானதென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். நடைமுறைக் கைந்நூலின் 109 வது நிர்வாகப் பிரமாணத்திற்கிணங்க பதில் நியமன வேலைக்கு அவரை விடுதல் செய்ய நான் சம்மதிக்கின்றேன்/சம்மதிக்கவில்லை.

———
திணைக்களத் தலைவர்.

திகதி : ———.

8–499—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866.

---

## ஆயுள்வேத திணைக்களம்

**அரசாங்க ஆயுள்வேதக் கல்லூரியில் பட்டத்திற்கு பின்பெறும் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**"ஆயுள்வேதத்தில் உயர்தகைமை"**

**(எச். பி. ஏ. 1969–70)**

இல. 14,862, 11.7.69. அரசாங்கவர்த்தமானியிலுள்ள 3.7.69 ம் திகதி கொடுக்கப்பட்டுள்ள விபரத்தில் பின்வரும் மாற்றங்களை அவதானிக்கவும்.

2. **அனுமதிப்பதற்கு வேண்டிய தகைமைகள்.**—இது பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது :

(1) அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதக் கல்லூரியினது பட்டமுடையவர்களாகவோ அல்லது அதற்கு சமனான பட்ட முடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பின்வரும் குறிப்பு 2 வது பகுதியிலுள்ள III ம் பிரிவிற்கு பொருந்தும் :

**குறிப்பு.**—இறுதிப்பரீட்சையில் 1 ம் வகுப்பில் அல்லது 2 ம் வகுப்பில் சித்தியெய்தியவர்கட்கும், 1965 ம் ஆண்டிற்கு முன்னர் விஷேட சித்தியெய்தியவர்கட்கும் அல்லது ஒரே முறையில் எல்லாப் பாடங்களிலும் சித்தியெய்தியவர்கட்கும் விஷேட சலுகைகள் வழங்கப்படும்.

3. அனுமதிப் பரீட்சைக்கான பாடங்களின் கீழ் " நிதானம் " என்றுள்ளதை " நிதானமும் காயசிகிச்சையும் " எனக்கொள்ளவும். " சரீர விஞ்ஞானம் " என்னும் பகுதியையும் 6 வதாக சேர்த்துக்கொள்ளவும்.

4. விண்ணப்பங்களின் முடிவு திகதி 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பண்டித வில்லியம் அல்விஸ்,
அதிபர்,
அரசாங்க ஆயுள்வேதக் கல்லூரி.

அரசாங்க ஆயுள்வேதக் கல்லூரி,
பண்டாரநாயக்கபுர,
ராஜகிரிய.

1969 ம் ஆண்டு யூலை மீ 25 ந உ.

8–376—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866.

## ஆயுள்வேத திணைக்களம்

### மருத்துவ உத்தியோகத்தர் பதவி (சாதாரண தரம்)

### (ஆயுள்வேத வைத்தியசாலைகள்—(இரச செய்து காட்டல்)

ஆயுள்வேத திணைக்களத்தின் ஆயுள்வேத வைத்தியசாலைகளில் (இரச செய்துகாட்டல்) மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களில் செய்யப்பட்டு 1969.8.23 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக ஆயுள்வேத ஆணையாளர், கொழும்பு 8, என்ற முகவரியில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு.—ஆண்டொன்றுக்கு 3,180 ரூபா—6 × 120, 8 × 180 உடன் 6 × 240—6,780 ரூபா. 4,080 ரூபாவுக்கும், 4,800 ரூபாவுக்கும், 5,580 ரூபாவுக்கு முன்வினைத்திறமைகாண் தடைகளுண்டு.

**வினைத்திறமைகாண் தடைகள்—**

(i) சேவையில் உறுதிப்படுத்தப்படு முன்னர் இவ்வுத்தியோகத்தர் நிதிப்பிரமாணங்கள், நிருவாகப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகள், வைத்திய சாலைகளின் நிரு வாகம் பற்றிய பிரமாணங்கள் ஆகியவற்றில் நடாத்தப்படும் திணைக்களப் பரீட்சையொன்றில் சித்திபெறல் வேண்டும்.

(ii) 4,080 ரூபாவுக்கு அப்பால் பதவி உயர்வு பெறுமுன்னர், இவ்வுத்தியோகத்தர், இரண்டாம்மொழி ஒன்றில் அமையும் தேர்ச்சிப் பரீட்சையொன்றில் சித்திபெறுதல் வேண்டும்.

(iii) 4,800 ரூபாவுக்கு அப்பால் பதவி உயர்வு பெறுமுன்னர், இவ்வுத்தியோகத்தர், ஆயுள்வேத மருத்துவமுறைபற்றிய பின் வரும் பாடங்களுள் எவை இரண்டிலேனும் நடாத்தப்படும் திணைக்களப் பரீட்சையொன்றில் சித்திபெறுதல் வேண்டும். இப்பரீட்சைக்குப் பொருத்தமான பாடங்கள் பற்றி ஆயுள்வேத ஆணையாளர் முடிவு செய்வார்.

1. தடுப்புமுறைச் சுகாதாரமும், துப்பரவு முறைகளும்.
2. பஞ்சகர்ம சிக்கிற்சு.
3. போசனை
4. குழந்தை வைத்தியம்.
5. நாடித்துடிப்பின்மூலம் நோய்வகை அறிதல்.
6. பல் மருத்துவம்.
7. உளநோய்களும் பிறவும்.

(iv) 5,580 ரூபாவுக்கு அப்பால் பதவி உயர்வு பெறுமுன்னர் இவ்வுத்தியோகத்தர் தொடக்க ஆராய்ச்சியில் தகைமைபெற்ற வராகவோ ஆயுள்வேதம் தொடர்பான நூல்கள் அல்லது கட்டுரைகள் அல்லது இரண்டையும் வெளியிடுவதில் போதி யளவு புகழ்பெற்றவராகவோ அல்லது பட்டத்திற்குப் பிந்திய உயர் தகைமைகள் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

3. **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.—**

(i) இப்பதவிகள் நிரந்தரமானதும், உபகாரச் சம்பள உரித்துடையது மாகும். வி. அ. ச. நிதிக்கு உதவுதொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ii) தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் சொந்த மருத்துவச் செய் கைக்கு உரித்துடையவராவார்.

4. **கல்வித் தகைமைகளும், பிற தகைமைகளும்.—**

ஒவ்வொரு அபேட்சகரும், தான்—

(i) சிறந்த நன்னடத்தையும், தேகாரோக்கியமும் உடையவரென் றும் ;

(ii) 23.8.1969 ஆந் திகதியில் 23 வயதுக்குக் குறைந்தவரல்ல ரென்றும், 35 வயதுக்குக் கூடியவரல்ல என்றும், (எலவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது)

(iii) (அ) அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேத நிலையமொன்றின் டிப் ளோமா உடையவரென்றும், ஆயுள்வேத திணைக்களத் தின் வைத்தியசாலை ஒன்றில் ஒருவருடத் திருப்திகரமான பயிற்சியைப் பூர்த்தி செய்தவரென்றும் அல்லது 5 வருடங் களுக்கு மேல் தொழில் புரிந்தவரென்றும் ;
அல்லது

(ஆ) பொது ஆயுள்வேதத் தொழில் புரிவோராக 10 வருட அனுபவமுடைய பதிவுசெய்யப்பட்ட ஆயுள்வேத வைத் தியராக உள்ளாரென்றும் திருப்திகரமான சான்றளித்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர்கள் யாவரும் பின்வரும் சான்றிதழ்களின் பிரதி களை (மூலப்பிரதிகள் அல்ல) தங்களது விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (ஞானஸ்நானப் பத்திரங்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணங்களுக் கான வழங்கிய பிறப்பு பதிவுச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா).

(ஆ) உயர் தொழிலும் அல்லது மிகக்கூடிய கல்வித் தகைமைகளும்,

(இ) அண்மையில் பெறப்பட்ட நன்னடத்தை பற்றிய சான்றிதழ்கள் (எலவே அரசாங்க சேவையில் உள்ள பரீட்சார்த்திகள் இந்த உப–பிரிவின்கீழ் குறிக்கப்பட்ட சான்றிதழ்களை சமர்ப் பிக்கும்படி கேட்கப்படமாட்டார்கள்)

**குறிப்பு.**—விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட்ட சாதனங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

6. இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படும் அபேட்சகர் தனது சொந்தக் கடமைகளுடன் ஆயுள்வேதக் கல்லூரி மாணவர்களுக்கு இரச மருந்துத் தயாரிப்பிலும் இரச செய்துகாட்டலிலும் குறைந்தபட்ச விரிவுரைகள் ஆற்றும்படி வேண்டப்படுவர்.

7. இந்த வர்த்தமானியின் I ஆம் பகுதி, II ஆம் பிரிவின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள நியமனங் களுக்குப் பொருத்தமான நிபந்தனைகள் இப்பதவிக்கும் பொருத்த முடையதாக அமையும்.

ஆயுள்வேத திணைக்களம்,
கொழும்பு 8,
1969 ம் ஆண்டு யூலை மீ 30 ந் உ.

டபிள்யூ. ஜே. ஆர். நவகமுவ,
ஆயுள்வேத ஆணையாளர்.

### மாதிரிப் படிவம்

### ஆயுள்வேத திணைக்களம்

#### மருத்துவ உத்தியோகத்தர் பதவி (சாதாரண தரம்)

#### ஆயுள்வேத வைத்தியசாலைகள் (இரச செய்துகாட்டல்)

1. முழுப்பெயர் :————.
(பெரிய எழுத்துக்களில்)
(அ) முதற் பெயர் :————.
(ஆ) பிற பெயர்கள் :————.
2. முகவரி :————.
3. பிறந்த திகதியும், இடமும் :————.
(பிறப்புப் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
1969.8.23 இல் சரியான வயது—
ஆண்டுகள் :————. மாதங்கள் :————. நாட்கள் :————.
4. இலங்கையரா ? அல்லாதவரா ? :————.
வம்சாவழி காரணமாகவா, பதிவு காரணமாகவா ? :————.
5. பெறப்பட்ட மிக உயர்ந்த கல்வித் தகைமைகள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
6. விண்ணப்பகாரர் டிப்ளோமா பட்டமுடையவராயின் உயர்தொழிற் றகைமைகளைக் குறிக்கவும்—
(i) டிப்ளோமா பட்டப் பெயர் :————.
(ii) டிப்ளோமா பெற்ற ஆண்டு :————.
(iii) வகுப்பு :————.
(iv) நிலையம் :————.
7. பதிவுசெய்யப்பட்ட வைத்தியராயின் பதிவு செய்யப்பட்ட இலக்கமும், ஆண்டும் :————.
8. இரச மருந்து தயாரிப்பதிலுள்ள அனுபவம் :————.
9. சொந்த மருத்துவச் செய்கையிலுள்ள அனுபவம் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
10. அரசாங்க சேவையிலுள்ளவராயின், பதவிப்பெயர், நியமனத் திகதி, பதவியிலிருந்து விலகிய திகதியும், காரணமும்:————.
11. குறிப்புகள் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பட்ட விவரங்கள் உண்மை யானவையென்றும், சரியானவையென்றும், நான் இத்தால் உறுதிப் படுத்துகிறேன். இதனகத்தில் உள்ள விவரங்கள் எவையும் பொய் யானவை அல்லது பிழையானவை என்று தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் நியமனத்திற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எதுவித நட்டஈடு மின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் நான் ஆளாவேன் என்ப தையும் நான் அறிவேன்.

————,
திகதி :———— விண்ணப்பகாரரின் ஒப்பம்.

8–436/1—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

## ஆயுள்வேத திணைக்களம்

### மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள் (சாதாரணதரம்)
### (ஆயுள்வேத வைத்தியசாலைகள்)

ஆயுள்வேத திணைக்களத்தின் ஆயுள்வேத வைத்தியசாலைகளில் (சாதாரண தர) மருத்துவ உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களில் செய்யப்பட்டு 1969.8.23 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக ஆயுள்வேத ஆணையாளர், கொழும்பு 8 என்ற முகவரியில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—ஆண்டொன்றுக்கு 3,180 ரூபா—6×120, 8×180 உடன் 6×240—6,780 ரூபா. 4,080 ரூபாவுக்கும், 4, 800 ரூபாவுக்கும், 5,580 ரூபாவுக்கு முன் வினைத்திறமைகாண் தடைகளுண்டு.

**வினைத்திறமைகாண் தடைகள்.—**

(i) சேவையில் உறுதிப்படுத்தப்படு முன்னர் இவ்வுத்தியோகத்தர் நிதிப் பிரமாணங்கள், நிருவாகப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகள், வைத்திய சாலைகளின் நிருவாகம் பற்றிய பிரமாணங்கள் ஆகியவற்றில் நடாத்தப்படும் திணைக்களப் பரீட்சை யொன்றில் சித்திபெறல் வேண்டும்.

(ii) 4,080 ரூபாவுக்கு அப்பால் பதவி உயர்வு பெறுமுன்னர், இவ்வுத்தியோகத்தர், இரண்டாம்மொழி ஒன்றில் அமையும் தேர்ச்சிப் பரீட்சை யொன்றில் சித்திபெறுதல் வேண்டும்.

(iii) 4,800 ரூபாவுக்கு அப்பால் பதவி உயர்வு பெறுமுன்னர், இவ் வுத்தியோகத்தர், ஆயுள்வேத மருத்துவ முறைபற்றிய பின்வரும் பாடங்களுள் எவை இரண்டிலேனும் நடாத்தப்படும் திணைக்களப் பரீட்சையொன்றில் சித்திபெறுதல் வேண்டும். இப்பரீட்சைக்குப் பொருத்தமான பாடங்கள் பற்றி ஆயுள்வேத ஆணையாளர் முடிவு செய்வார்—

1. தடுப்புமுறைச் சுகாதாரமும், துப்பரவு முறைகளும்.
2. பஞ்சகர்ம சிகிச்சை.
3. போசணை.
4. குழந்தை வைத்தியம்.
5. நாடித்துடிப்பின் மூலம் நோய்வகை அறிதல்.
6. பல் மருத்துவம்.
7. உளநோய்களும் பிறவும்.

(iv) 5,580 ரூபாவுக்கு அப்பால் பதவி உயர்வு பெறுமுன்னர் இவ்வுத்தியோகத்தர் தொடக்க ஆராய்ச்சியில் தகைமை பெற்றவராகவோ ஆயுள்வேதம் தொடர்பான நூல்கள் அல்லது கட்டுரைகள் அல்லது இரண்டையும் வெளியிடுவதில் போதியளவு புகழ்பெற்றவராகவோ அல்லது பட்டத்திற்குப் பிந்திய உயர் தகைமைகள் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

3. **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.—**

(i) இப்பதவிகள் நிரந்தரமானதும், உபகாரச் சம்பள உரித்துடையது மாகும். வி. அ. ச. நிதிக்கு உதவுதொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ii) தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் சொந்த மருத்துவச் செய்கைக்கு உரித்துடையவராவார்.

4. **கல்வித் தகைமைகளும், பிற தகைமைகளும்.—**

ஒவ்வொரு அபேட்சகரும், தான்—

(i) சிறந்த நன்னடத்தையும், தேகாரோக்கியம் உடையவரென்றும் ;

(ii) 23.8.1969 ஆந் திகதியில் 23 வயதுக்குக் குறைந்தவரல்லரென்றும், 35 வயதுக்குக் கூடியவரல்ல என்றும், (எலவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது),

(iii) (அ) அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேத நிலையமொன்றின் டிப்ளோமா உடையவரென்றும், ஆயுள்வேத திணைக்களத்தின் வைத்திய சாலை ஒன்றில் ஒருவருடத் திருப்திகரமான பயிற்சியைப் பூர்த்தி செய்தவரென்றும் அல்லது 5 வருடங்களுக்கு மேல் தொழில் புரிந்தவரென்றும் ;

அல்லது

(ஆ) பொது ஆயுள்வேதத் தொழில் புரிவோராக 10 வருட அனுபவமுடைய பதிவுசெய்யப்பட்ட ஆயுள்வேத வைத்தியராக உள்ளாரென்றும் திருப்திகரமான சான்றளித்தல் வேண்டும்

5. விண்ணப்பகாரர்கள் யாவரும் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) தங்களது விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (ஞானஸ்நானப் பத்திரங்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணங்களுக்கான வழங்கிய பிறப்பு பதிவுச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா) ;

(ஆ) உயர் தொழிலும் அல்லது மிகக்கூடிய கல்வித் தகைமைகளும் ;

(இ) அண்மையில் பெறப்பட்ட நன்னடத்தை பற்றிய சான்றிதழ்கள். (எலவே அரசாங்க சேவையில் உள்ள பரீட்சார்த்திகள் இந்த உப—பிரிவின் கீழ் குறிக்கப்பட்ட சான்றிதழ்களை சமர்ப்பிக்கும்படி கேட்கப்படமாட்டார்கள்)..

**குறிப்பு.**—விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட்ட சாதனங்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டா.

இந்த வர்த்தமானியின் I ஆம் பகுதி, II ஆம் பிரிவின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள நியமனங்களுக்குப் பொருத்தமான நிபந்தனைகள் இப்பதவிக்கும் பொருத்தமுடையதாக அமையும்.

டபிள்யூ. ஜே. ஆர். நவகமுவ,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத திணைக்களம்,
கொழும்பு 8,
1969 ம் ஆண்டு யூலை மீ 30 ந உ.

### மாதிரிப் படிவம்

## ஆயுள்வேத திணைக்களம்

### மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள் (சாதாரண தரம்)
### ஆயுள்வேத வைத்தியசாலைகள்

1. முழுப்பெயர் :————.
(பெரிய எழுத்துக்களில்)
(அ) முதற் பெயர் :————.
(ஆ) பிற பெயர்கள் :————.
2. முகவரி :————.
3. பிறந்த திகதியும், இடமும் :————.
(பிறப்புப் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
23.8.1969 இல் சரியான வயது—
ஆண்டுகள் :————. மாதங்கள் :————. நாட்கள் :————.
4. இலங்கையரா ? அல்லாதவரா ? :————.
வம்சாவழி காரணமாகவா, பதிவு காரணமாகவா ? :————.
5. பெறப்பட்ட மிக உயர்ந்த கல்வித் தகைமைகள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
6. விண்ணப்பகாரர் டிப்ளோமா பட்டமுடையவராயின் உயர்தொழிற் றகைமைகளைக் குறிப்பிடுக—
(i) டிப்போளமா பட்டப் பெயர் :————.
(ii) டிப்ளோமா பெற்ற ஆண்டு :————.
(iii) வகுப்பு :————.
(iv) நிலையம் :————.
7. பதிவுசெய்யப்பட்ட வைத்தியராயின் பதிவு செய்யப்பட்ட இலக்கமும், ஆண்டும் :————.
8. சொந்த மருத்துவச் செய்கையிலுள்ள அனுபவம் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).
9. அரசாங்க சேவையிலுள்ளவராயின், பதவிப்பெயர், நியமனத் திகதி, பதவியிலிருந்து விலகிய திகதியும், காரணமும் :————.
10. குறிப்புகள் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பட்ட விவரங்கள் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதனகத்தில் உள்ள விவரங்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை என்று தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும், நியமனத்திற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எதுவித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் நான் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

திகதி :————.

8–436/2—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

## வன திணைக்களம்

### 2 ஆம் வகுப்பு படவரைஞர் பதவிகள்

வன திணைக்களத்தில் மூன்று 2 ஆம் வகுப்பு படவரைஞர் பதவிகட்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப்பத்திரத்தில் 1969 ஓகஸ்ட் மாதம் 25 ம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கவேண்டும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்கான சம்பள விகிதம் வருடத்திற்கு 1,260—120 × 21—ரூபா 3,780 ஆகும் தகுதிகாண் எல்லை ரூபா 2,820 க்கு முன்பாகும்.

3. **சேர்வு நியதிகள்.**—பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையனவுமாகும். நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடத்திற்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தான் (அ) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவரென்றும் (ஆ) 1969 ஓகஸ்ட் மாதம் 25 திகதியில் 21 வயதிற்கு உட்படாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருப்பவர் (இவ்வயதுக் கட்டுப்பாடு ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இல்லை) என்றும்,

(இ) (i) ஆரம்பகணிதம் ஓர் பாடமாக அமைந்த சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி எய்தியவராகவும் அத்துடன் கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்று உடையவரென்றும் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.

(ii) (1) படவரைஞர்க்கான ஒரு வருட முழுநேர ஆரம்பப் பயிற்சியை இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் திருப்திகரமாக முடித்தவராகவும் அத்துடன் இருவருட பயிற்சி உடையவராகவோ அல்லது

(2) சிறிய மேற்பார்வையாளரின் பயிற்சி நெறியை அல்லது கனிஷ்ட தொழில் நுட்ப அலுவலாளர்கள் பயிற்சி நெறியை இலங்கை தொழில் நுட்பக்கல்லூரியில் திருப்திகரமாகப் பூர்த்தி செய்தவராகவும் அத்துடன் ஒரு வருடத் தொழில் பயிறசி உடையவராகவும் அல்லது

(3) இலங்கைத் தொழி நுட்பக் கல்லூரியில் மாலைநேர பலதரப்பட்ட வகுப்புக்களில் 3 வருடப்பயிற்சியுடன் பெயர் பெற்ற பொறியியல் நிறுவனத்தில் அல்லது உரிமைப் பொறியியலாளரிடத்தில் அல்லது கட்டடக்கலைஞர் இடத்தில் 4 வருடத் தொடர் பயிற்சி பெற்றவராகவும் அல்லது (இத்தகைய தகைமைகளையுடைய விண்ணப்பதாரருக்கு சம்பள விகிதத்தில் ரூபா 1,620 க்கு மேற்படாத ஓர் எல்லையில் நியமனம் வளங்கல் கவனிக்கப்படும்,)

(4) 1947 க்கு முன்பாக இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் 2 ஆம் கட்ட கட்டட அமைப்புப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இரண்டுவருடத்துக்குக் குறையாமல் பெயர் பெற்ற வர்த்தகஸ்தாபனத்தில் அல்லது அரசாங்க திணைக்களத்தில் படவரைஞராக வேலை செய்தவராகவும் அல்லது

(5) பெயர்பெற்ற பொறியியல் நிறுவனத்தில் அல்லது உரிமை பெற்ற பொறியியலாளர் அல்லது கட்டடக்கலைஞரின் கீழ் படவரைஞராக ஐந்து வருடங்கள் சேவை செய்தவராகவும் இருத்தல் வேண்டும்

5. விண்ணப்பதாரர் தங்கள் விண்ணப்பங்களுடன் கீழ் காண்பவற்றின் பிரதிகளை இணைத்து அனுப்பவேண்டும்.

பிறப்பு பதிவு அத்தாட்சிப் பத்திரம்.

**மு. கு.** ஞானஸ்ஞானம் செய்யும் பத்திரமும் உதவிபெறும் பாடசாலைகளுக்காக இயற்றப்பட்ட விதிகளின் கீழ் கொடுக்கப்பட்ட பத்திரங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

ஆக உயர்ந்த கல்வித்தராதர அத்தாட்சிப்பத்திரம்.

சமீபத்தில் பெறப்பட்ட மூன்று நற்சாட்சிப்பத்திரம்

6. இவ்வர்த்தமானியில் பகுதி I தொகுதி II இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைக் கவனிக்குக.

டபிள்யூ. ஆர். எச். பெரேரா,
வன பாதுகாவல் அதிபர்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய விலாசம்;
வன பாதுகாவல் அதிபர்,
வன திணைக்களம்,
த. பெ. இல. 509,
கொழும்பு–2.
1969 ம் ஆண்டு ஜூலை மீ 30 ந் வ.

## வன திணைக்களம்

### 2 ஆம் வகுப்பு படவரைஞர் பதவிகட்கான விண்ணப்பப் பத்திரம்

1. முழுப் பெயர் :————.
2. விலாசம் :————.
3. பிறந்த திகதியும் இடமும் :————.
4. தேசிய இனம் :————.
5. தற்பொழுது வகிக்கும் பதவி :————.
6. தற்பொழுது பதவியில் இல்லாவிட்டால் கடைசியாக வகித்த பதவி :————.
7. கல்வித் தகைமைகள் :————.
8. தொழில் நுட்பத் தகைமைகள் :————.
9. பயிற்சி, தொழில் பயிற்சி முதலியனவற்றின் விபரங்கள் திகதியோடு :————.
10. முந்திய அனுபவங்கள் நியமனங்கள் ஆகியனவற்றின் விபரங்கள் :————.
11. முன்பு ஏதாவது அரசாங்க திணைக்களத்தில் வேலை செய்திருப்பின் அதையிட்டு விலகியதன் காரணம் :————.
12. சட்டமுறை நீதி மன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தால் குற்றத்தின் விபரங்கள் தண்டனைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

————,
திகதி :————, ஒப்பம்.

8–464—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

---

## களுத்துறை மாவட்டத்தில் மீகஹதன்னை பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் பஸ்துன் கோறளை கிழக்கு பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

மீகஹதன்னை பிறப்பு, இறப்பு, பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலங் வசிக்கின்றவர்கள் **அல்லது** பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தைந்து வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிறதராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராமசேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்றது அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

லீல் குணசேகர,
மாவட்டப் பதிவாளர்.

களுத்துறை மாவட்டப்பதிவாளர் அலுவலகம்,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 25 ந் வ.

**8–487—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866.**

## துறைமுக ஒத்துப்பார்த்தல், பாதுகாத்தல் சேவைகள் கூட்டுத்தாபனம்

### உதவிக் கணக்காளர் பதவி

மேற்படி கூட்டுத்தாபனச் சேவையில் உதவிக் கணக்காளர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **சம்பளம்.**—மாதாந்தச் சம்பளம் ரூபா 600—40—1000 (எல்லாம் உட்பட)

2. **வயதுக்கட்டுப்பாடு.**—21.8.69 அன்று 40 வயதுக்கு மேற்படாதவராய் இருத்தல் வேண்டும்.

3. **தகைமைகள்.**—

(1) பரம்பரையாகவோ அன்றேல் பதிவு மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) சிறந்த நற்குணமுடையவராகவும், உடல் ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(3) இலங்கையில் தத்துவக் கணக்காளர் நடுத்தர பரீட்சையில், அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்புளோமாப் பரீட்சையில் சித்தியெய்தி இருப்பதுடன், குறைந்தது 3 வருட கணக்கியல் அனுபவம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக ஸ்தாபனத்தில் அல்லது அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் இருத்தல் வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகளும், மற்றும் தேவைகளும்.**—

(1) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்குரிய நியமனவிதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றை அனுசரித்து நடத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரரின் நியமனம் அரசாங்க சேவையில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டாலன்றி அவர்களின் தகுதிகாண் காலம் இரு வருடங்களாக இருக்கும்.

(3) பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் அற்றதும் ஆகும். பதவியேற்போர் வேலையாட்கள் சகாய நிதிக்குப் பணம் செலுத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கீழே தரப்பட்ட மாதிரிப் படிவத்தில் செய்யப்பட்டு 1969, ஆவணி 21 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு அஞ்சல் மூலம் கீழ்க் கையொப்பமிட்டிருப்பவருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

அரசாங்க சேவை, அரசாங்க கூட்டுத்தாபனத்திலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வத் திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்களூடாக அனுப்பப்படுதல் வேண்டும். உத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்படின் அவரை விடுவிக்க முடியும் என்பதை அத்தலைவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலம் அல்லாதவை) இணைத்தல் வேண்டும் :—

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(2) மிகக் கூடிய கல்வித் தராதரப் பத்திரம், அல்லது உயர்தொழில் தகைமை பெற்றதற்கான சான்றிதழ் அல்லது இவ்விரண்டும்.

(3) முன்னர் வேலை கொள்வோரிடமிருந்து பெற்ற அனுபவம், ஆற்றிய கடமைகளின் தன்மை ஆகியவற்றைக் காட்டும் சான்றிதழ்.

(4) விண்ணப்பதாரரின் நற்குணம், தொழிலுக்குத் தகுதியான தன்மை ஆகியவற்றைக் கொண்ட சமீபத்தில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள்.

துறைமுக ஒத்துப்பார்த்தல், பொது முகாமையாளர்.
பாதுகாத்தல் சேவைகள் கூட்டுத்தாபனம்,
21, செத்தம் வீதி,
கொழும்பு 1.
1969 ம் ஆண்டு ஜூலை மீ 25 ந உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. பதவி :————.
2. பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.
   (அ) முதற் பெயர் :————.
   (ஆ) வேறு பெயர்கள் :————.
3. அஞ்சல் முகவரி :————.
4. தேசிய இனம் :————.
   (பரம்பரையாகவோ அல்லது பதிவு மூலமோ)
5. விண்ணப்பதாரர் பிறந்த இடமும் தேதியும் :————.
   (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைத்தல் வேண்டும்)
6. 21.8.1969 அன்று வயது—
   ——— வருடங்கள் ———மாதங்கள் ——— நாட்கள்.
7. மணமானவரா அல்லது மணமாகாதவரா :————.
8. மிகக் கூடிய கல்வித் தகைமையும், உயர்தொழில் தகைமையும் : ————.
   (சான்றிதழ்களின் பிரதிகள் (மூலம் அல்லாதவை) இணைக்கப் படுதல் வேண்டும்)
9. சிங்களம் அல்லது தமிழில் உள்ள அறிவு :————.
10. தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள் :————.
11. முன் அனுபவம் பற்றிய விபரங்கள் :————.
12. வேறு ஏதாவது விபரங்கள் :————.
13. விண்ணப்பதாரர்களுடைய குணச் சான்றிதழ்கள் வழங்கக் கூடிய இருவரின் பெயரும் பதவியும் :————.
   (குணச்சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்).

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவை எனவும், சரியானவையெனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதனுள் அடக்கப்பட்ட விபரங்கள் ஏவையேனும் பொய்யானவை அல்லது சரியானவை அல்ல எனத் தெரிவுக்குமுன் கண்டுபிடிக்கப்பட்டால் தகைமை நீக்கத்திற்கும், பதவி நியமனத்திற்குப் பின் அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் நட்ட ஈடின்றிப் பதவி நீக்கத்திற்கும், ஆளாகுவேன் என்பதை நான் அறிவேன்.

————————,
திகதி :————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

8–417—8.8.69 ந தேதிய வர்த்தமானி இல. 14,866

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### வெற்றிடங்கள்

### பயிற்சிப் போர்மன் பதவிகள்

கட்டுபெத்த இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரியில் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் தொழில்நுட்பவியலாளர் தராதரப் பத்திரத்தை அண்மையில் பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தில் பயிற்சிப் போர்மனாக நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள இறுதிப்பரீட்சையை எடுத்து அவற்றின் பெறுபேறுகளை எதிர்பார்க்கும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களும் கவனத்திற்கு எடுக்கப்படும்.

தெரிவு செய்யப்படும் பயிற்சியாளர்கள் இருவருட காலத்திற்கு பயிற்சி பெற வேண்டப்படுபவர், பயிற்சிக்காலத்தில் எல்லாம் உட்பட படியாக மாதம் ரூபா. 300/– வழங்கப்படும். கூட்டுத்தாபனத்தால் நிர்ணயிக்கப்படும் தரத்தை அடையும் பயிற்சியாளர்கள் இரண்டாந்தரப் போர்மன் பதவிகளுக்கு பின்வரும் சம்பள விகிதத்தின் ஆரம்பத்தில் நியமிக்கப்படுவார்கள்.

ரூபா $\frac{360–450}{6 \times 15}$ (எல்லாம் உட்பட) மாதமொன்றிற்கு.

அத்துடன் உயர்தரத்திற்கு உயர்ச்சி பெற்றால் பின்வரும் சம்பள விகிதத்தில் நியமிக்கப்படுவர்.

தரம் 1—ரூபா $\frac{400–600}{8 \times 25}$ (எல்லாம் உட்பட) மாத மொன்றிற்கு.

சிரேட்ட தரம் 1 ரூபா $\frac{550–750}{8 \times 25}$ (எல்லாம் உட்பட) மாதமொன்றிற்கு.

இக் கந்தோரில் கிடைக்கப்பெறும் படிவங்களில் விண்ணப்பதாரர்கள் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 22.8.1969 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்க்காணும் விலாசத்திலுள்ள பொது முகாமையாளருக்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்கவேண்டும்.

தபாலில் விண்ணப்பப்படிவங்களை பெறவிரும்புபவர்கள், தங்களது விலாசம் பொறித்த முத்திரை ஒட்டிய நீண்ட உறையினை அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

மேற் கூறப்பட்டுள்ள தகைமைகள் உள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

135, யூனியன் இடம், தி. ப. நாரன்பனுவ,
த. பெ. 1367, பொது முகாமையாளர்,
கொழும்பு 2, கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.
1969 ம் ஆண்டு ஜூலை மீ 24 ந உ.

8–473—8.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,866

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### பகுதி நேர அறிவிப்பாளர் பதவி—வர்த்தக சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினுல் பகுதி நேர அறிவிப்பாளர் (ஹிந்தி) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 2·50 சதவீதம் நாளொன்றுக்கு ரூபா 17·50 க்கு அதிகரிக்காத அமயத்திற்குரிய அடிப்படையில் வழங்கப்படும்.

போக்குவரத்து அல்லது ஏனைய படிகள் கொடுக்கப்படமாட்டாது.

விண்ணப்பதாரர்கள் சன்மானம் எதுவும் இன்றி குறிகிய காலப் பயிற்சி ஒன்றிற்கு தம்மை உட்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஊழியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் பகுதிநேர அறிவிப்பாளர்களாக மாத்திரமே இருந்துவருவார்கள். இந்த ஸ்தாபனத்தின் நிரந்தர ஊழியர்களாக அவர்கள் கருதப்பட மாட்டார்கள். அவர்கள் சேவை தேவைப்படும்பொழுது தேவையான நேரங்களில் மாத்திரமே பெறப்படும்.

2. விண்ணப்பதாரர்கள் 18–40 வயதுக்கிடையே உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான தராதரப்பத்திரம் அல்லது உயர்தர பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். முன்னைய ஒலிபரப்பு அனுபவம் இருத்தல் வேண்டும். சிங்களமொழியில் சுமாரான அறிவு இருத்தல் மேலதிகமான தகைமையாகக் கருதப்படும். இத்தகைமைகளையுடைய கூட்டுத்தாபன ஊழியர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

3. இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் எழுதப்பட்டு 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர், மா அதிபர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், டொறிங்கடன் சதுக்கம், கொழும்பு 7 என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா. உறையின் இடதுகோடி தலைப்பில் "பகுதிநேர அறிவிப்பாளர்—(ஹிந்தி)" என்று தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

என். டி. ஜயவீர,
மா அதிபர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

கொழும்பு 7,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 31 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

#### பகுதி நேர அறிவிப்பாளர் பதவி (ஹிந்தி)

1. முழுப்பெயர் : ————.
2. நிரந்தர தபால் முகவரி :————.
3. பிறந்த திகதியும் பிறப்பிடமும் : ————.
   (பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
4. தேசிய இனம் : ————.
5. கல்வித் தகைமைகள் : ————.
   (சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
6. தேர்ச்சித் தராதரம் : —.
   (அ) ஹிந்தி : ————.
   (ஆ) சிங்களம் : ————.
   (இ) ஏனையமொழிகள் : ————.
7. ஒலிபரப்பு அனுபவம் பற்றிய விபரங்களும், ஏனைய விசேட உரிமைக் கோரிக்கைகளும் : ————.
8. குணநலச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கும் நபர்களின் பெயர்களும், முகவரிகளும் : ————.
   (பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
9. தற்போதைய அல்லது முன்னைய வேலை அனுபவங்கள் ஏதுமிருந்தால் அவைபற்றிய விபரங்களும் வேலைமேற்கொண்ட திகதிகளும் : ————.

————,
கையொப்பம்.

திகதி : ————.

8-480—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

---

# பரீட்சைகளும், பரீட்சை பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

### ஆசிரியர் கலாசாலைப் பிரவேசப் பரீட்சை (விசேட பயிற்சிகள்) 1969

1969 ஆகஸ்ட் 13 ஆம் தேதி ஆரம்பமாகவிருந்த மேற்படி பரீட்சை 1969 ஆகஸ்ட் 22 ஆம் தேதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

கே. ரீ. டபிள்யூ. சுமணசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

மலே வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 30 ந் உ.

8-377—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866.

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### விவசாய ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி

விவசாய ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தற்கான ஒரு பயிற்சி நெறி அம்பாறை, ஹாடி தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகும். பயிற்சி நெறி ஒரு வருட கால அளவினதாகும். இப்பயிற்சி நெறியைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்வோருக்கு விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும். 3 வருட திருப்திகரமான சேவையின் பின் இவ்விரண்டாம் வகுப்புப் பயிற்சித் தராதரப் பத்திரம் 1 ம் வகுப்புக்கு உயர்த்தப்படும்.

2. இப்பயிற்சி நெறியைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்து விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களாக நியமனம் பெறுவோர்க்கு ரூபா 1,860—120—2,100/– (வருடாந்தம்) என்ற சம்பள விகிதம் வழங்கப்படும். தராதரப் பத்திரம் 1 ம் வகுப்புக்கு உயர்த்தப்பட்டதும் சம்பள விகிதம் ரூபா 2,220—120, 180—4,620/– (வருடாந்தம்) ஆகும். இச்சம்பள விகிதம் பெறுவதற்கு இவ்வாசிரியர்கள் வாராந்தம் குறைந்தபட்சம் 10 மணித்தியாலங்களுக்கு விவசாயம் படிப்பிக்க வேண்டும்.

3. அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைத் திருப்தி செய்யவேண்டும் :—

(அ) நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(இ) 1.1.70 அன்று 18 வயதுக்கு மேற்பட்டவராயும் 45 வயதுக்குக் குறைந்தவராயும் இருக்க வேண்டும்.

குறிப்பு : இப்பயிற்சி ஆண்களுக்கு மட்டுமே அளிக்கப்படும். 3(ஈ) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ள ஆசிரியர்களும் மாணவ ஆசிரியர்களும் ஆசிரியரல்லாதோரும் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம். பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படும் ஆசிரியரல்லாத அபேட்சகர்கள் சி. பா. த. பத்திரம் பெற்றவர்களுக்கான சம்பள விகிதத்தில் உதவி ஆசிரியர்களாக 1.10.69 தொடக்கம் நியமனம் அளிக்கப்பட்டு 1.1.70 தொடக்கம் பயிற்சிநெறிக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(ஈ) சி. பா. த. ப. பரீட்சையில் அல்லது சமமான பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சைக்கு இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சிங்கள அல்லது தமிழ் மொழி, எண்கணிதம் அல்லது கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும். மேலும், பேராதனை அல்லது குண்டசாலை விவசாயப் பாடசாலையில் அல்லது அம்பாறை ஹாடி தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் இருவருட பயிற்சி நெறியைப் பின்பற்றி விவசாயத் தகுதித் தேர்வுப் பத்திரமும் பெற்றிருக்க வேண்டும்.

4. தகுதியுடைய விண்ணப்பதாரிகள் யாவரும் காலையில் $1\frac{1}{2}$ மணித்தியால ஒரு பொது வினாப்பத்திரத்துக்கும் பின்னேரம் ஒரு வாய்மூலப் பரீட்சைக்கும் தோற்ற வேண்டும். இப்பரீட்சை நடைபெறும் திகதியும் இடமும் அபேட்சகர்களுக்குக் காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.

5. இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவோரின் விண்ணப்பங்கள் ஆசிரியர் கல்விக்குப் பொறுப்பாகவுள்ள வித்தியாதிபதிக்கு 1969 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள், கீழ்க்காணும் விதிக்கப்பட்ட படிவ முறையில் தயாரிக்கப்பட வேண்டும். அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட மாட்டாது.

ஈ. எல். விஜெமான,
வித்தியாதிபதி (ஆசிரியர் கல்வி),
மகா வித்தியாதிபதிக்காக.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 30 ந் உ.

## மாதிரிப் படிவம்

1. (அ) பெயர், முதலெழுத்துக்களுடன் :————.
   (ஆ) பிறந்த திகதி :————.
2. (அ) முழுப்பெயர் :————.
   (ஆ) சாதியம் :————.
3. விலாசம்—
   சொந்த :————.
   அலுவலக :————.
4. கல்வித் தகைமைகள்—
   (அ) நூற்கல்வித் தகைமைகள் :————.
   (ஆ) உயர்தொழிற் தகைமைகள் :————.
5. ஆசிரியராக நியமனம் பெற்ற திகதி :————.
6. மாணவ ஆசிரியராக நியமனம் பெற்ற திகதி :————.
7. தற்போது சேவை புரியும் பாடசாலைப் பெயர் :————.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

அனுப்பப்படுகிறது.

அதிபர்/தலைமையாசிரியரின் ஒப்பம்.

திகதி :————.

8–437—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**இரத்மலானை நீர்ப்பாசனத் திணைக்கள இயந்திரக் கிளையில் உள்ள வி. ஆர்.—180 ம் இலக்கமுடைய உபயோகிக்கமுடியாத விக்கர்ஸ் டிராக்டர்கள் 9 தையும், இந்த டிராக்டர்களுக்கான மேலதிக உறுப்புகளையும் வாங்கி அகற்றுவதற்கான கேள்விப்பத்திரங்கள்**

இரத்மலானை இயந்திரக் கிளை நீர்ப்பாசனத் திணைக்களத்திலுள்ள வீ. ஆர். 180 ம் இலக்கமுடைய உபயோகிக்கமுடியாத விக்கர்ஸ் டிராக்டர்கள் பின்வரும் 4 வது பந்தியிலே தரப்பட்டுள்ள கேள்வி நிலைவரங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள பட்டியலிலுள்ளதும், கீழே ஒவ்வொரு அங்கத்திலும் தரப்பட்டுள்ள ஒவ்வொரு டிராக்டருக்குமான மேலதிக உறுப்புத் தொகைகளையும் வாங்கி அகற்றுதற்காக 1969, ஆகஸ்ட் மாதம் 28 ந் திகதி பி. ப. 3 மணி வரை இரத்மலானை இயந்திரக்கிளை தலைமைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் படிவங்களில் சமர்ப்பிக்கும்கேள்விப் பத்திரங்களை கொழும்பு 7, பௌத்த உலக தெருவின் நீர்ப்பாசனத் திணைக்களக் கேள்விப் பத்திரச் சபையின் தலைவர் 1969, ஆகஸ்ட் மாதம் 30 ந் திகதி மு. ப. 11 மணிவரை பெற்றுக்கொள்ளுவார்.

| அங்க இலக்கம் | | திணைக்கள இல. | மேலதிக உறுப்புகளின் தொகை |
|---|---|---|---|
| 1. | விக்கர்ஸ் வீ. ஆர். 180 டிராக்டர்—ஐ.டீ.ரீ. | 234 | 95 |
| 2. | விக்கர்ஸ் வீ. ஆர். 180 டிராக்டர்—ஐ.டீ.ரீ. | 235 | 51 |
| 3. | விக்கர்ஸ் வீ. ஆர். 180 டிராக்டர்—ஐ.டீ.ரீ. | 236 | 22 |
| 4. | விக்கர்ஸ் வீ. ஆர். 180 டிராக்டர்—ஐ.டீ.ரீ. | 237 | 23 |
| 5. | விக்கர்ஸ் வீ. ஆர். 180 டிராக்டர்—ஐ.டீ.ரீ. | 238 | 24 |
| 6. | விக்கர்ஸ் வீ. ஆர். 180 டிராக்டர்—ஐ.டீ.ரீ. | 239 | 24 |
| 7. | விக்கர்ஸ் வீ. ஆர். 180 டிராக்டர்—ஐ.டீ.ரீ. | 240 | 19 |
| 8. | விக்கர்ஸ் வீ. ஆர். 180 டிராக்டர்—ஐ.டீ.ரீ. | 241 | 20 |
| 9. | விக்கர்ஸ் வீ. ஆர். 180 டிராக்டர்—ஐ.டீ.ரீ. | 242 | 19 |

2. போயாவுக்கு முன்னைய நாளைத் தவிர்ந்த ஏனைய வேலை பார்க்கும் நாட்களில் மு. ப. 9 க்கும் பி. ப. 3 க்குமிடையில் இரத்மலானை நீர்ப்பாசனத் திணைக்கள இயந்திரக்கிளையில் மேற்தரப்பட்டுள்ள டிராக்டர்களையும் மேலதிக உறுப்புகளையும் பார்வையிட்டுக்கொள்ளலாம். இவை தனித்தனி அங்கமாக வழங்கப்படும்.

3. கேள்விப் படிவங்களைப் பெறுவதற்காக கேள்வியாளர் பெற விரும்பும் ஒவ்வொரு அங்கத்திற்கும் இரத்மலானை இயந்திரக்கிளை தலைமை பொறியியலாளர் அலுவலகத்திலோ கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவதொரு கச்சேரியிலோ கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 100 ஐச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டைக் காட்டிக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. மேற்காணும் பந்திகளில் கூறப்பட்டுள்ள இரு உத்தியோகத்தர்கள் ஒருவரிடமிருந்தோ, அல்லது இவ்விரு உத்தியோகத்தர்கள் ஒருவரின் பெயருக்கு அல்லது நீர்ப்பாசன அதிபர் என்ற பெயருக்கு தபால் மூலம் ரூபா 1 செலுத்தியோ டிராக்டர்களும் உறுப்புகளும் அடங்கிய நிரலையும் கேள்வியின் நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

எல். ஈ. டீ. எஸ். குணசேகரா,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு 7,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 23 ந் உ.

8–343—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

## கமத்தொழிற்றிணைக்களம்

**வவுனியா கமத்தொழிற் பண்ணைக்கு தண்ணீர்ப் "பம்ப்" விநியோகித்தல், பாரங்கொடுத்தல் ஆகியவற்றுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன**

மேல்வரும் வேலைகள் சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஓகத்து மாதம் 28 ந் திகதி மு. ப. 10 மணிவரையும் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

வவுனியா கமத்தொழில் பண்ணைக்கு மேல்வரும் திட்டத்திற்கமைய மண்ணெண்ணெயால் இயங்கக் கூடிய 2 அங். "தண்ணீர்ப் பம்ப்" விநியோகித்தல் பாரம் கொடுத்தல்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு மாதத்திற்குள் உடனடியாக விற்பனைக்கு தமது கைவசமுள்ள இருப்பில் இருந்து விநியோகித்தல் பாரங்கொடுத்தல் வேண்டும்.

(அ) மண்ணெண்ணெயால் இயங்கக்கூடிய 2 அங். புதிய "தண்ணீர்ப் பம்ப்" "சக்சன் 2 அங்." "டிலிவெறி 2 அங்." (வெளியேற்றுதல்)

(ஆ) சக்சன் (தண்ணீர் இழுக்கும் சக்தி) 25 அடி.

(இ) 50 அடி தலை (கெட்) மூலம் குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலத்திற்கு 3,400 கலன் தண்ணீரை வெளியேற்றக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

(ஈ) தேவையான நேரத்தில் கழற்றிப் பூட்டக்கூடிய வசதியுடையதாய் "பூட்வால்வ், செம்பு (பிரஸ்) கப்பிளின், தோல் (லெதர்) வாசர், ஹோலி சைட்னர், செம்பு நிப்பிள்" ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட 33 அடி நீள 2 அங். "அல்கத்தின் பைப்".

மேற்கூறிய திட்டத்திற்கமைய புதிய தண்ணீர் பம்பு கேள்விக்காரரால் விநியோகித்தல் வேண்டும். பம்பு இணைக்கப்பட்டு பண்ணை அதிபரின் திருப்திக்கமைய வேலை செய்யத் தொடங்கியவுடன் பணம் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரத்துடன் விநியோகிக்கப்படும் பம்பின் விபரங்கள் அடங்கிய விளக்கத்தை இணைத்தல் வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் ரூபா 10 வைப்புப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணக் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ), கமத் தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள் விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலை யின் பெயர்க் குறிப்பு "(சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும். ஆகிய வேலைக்களுக்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப் பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்கார ருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக் காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரி யுடன் (ப. மு. ஆ) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப் பணமாகக் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச் செயலகங்களி லும் அல்லது கமத்தொழில் இலாகா பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப் பிக் கொடுக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத் தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொந்தராத்துக் காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத் திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்களை திறக்கும் நேரத்தில் பிரசன்னமாயிருக்கலாம். யாழ்ப்பாணம் கமத்தொழில் கந் தோரில் (ப. மு. ஆ) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. கேள்வித் தொகையும் மொத்த மும் மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங் களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக் காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகிய வற்றைப் பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச் சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலைசெய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யா மலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமை யுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப் படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக் கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவர். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவு உற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கைய ரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

"இலங்கையர்" என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளச்சட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலை பார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகா வில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல்கள், வரவுப்பட்டியல் ஆகிய தாஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால்மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவ ராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அர சாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட் டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்துகொள்ள மாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்கு முரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க.க.வும், ப.)

பேராதனை.

8–351—8.8.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,866

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

பாவிப்புக்குதவாத பலவிதமான சாமான்கள் விற்பனை செய்வதற்கான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1969 செப்டெம்பர் மீ 1 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

1969, செப்டெம்பர் மீ 1 ம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப் பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரி டம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம் பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 200/- கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளா ருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1969, ஆகஸ்டு மீ 30 ம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளருக்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1, 31.7.1969

8—504—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

## வீதிகள் அமைத்தல்—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வீதிகள் அமைப்பதற்காய கேள்விப் பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

பள்ளமடுவிலிருந்து பெரிய மடுவுக்குப் பாதை அமைத்தல்.

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ஆம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதைப்பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப் பத்திரங்களை அனுப்பத் தகுதிவாய்ந்தவை.

3. ஒவ்வொரு விடயத்திற்கும் கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச்சேரியில் தலா ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டினைக் காண்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்டவேண்டியதில்லை.

4. கேள்விப்பத்திரங்களை மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் " அரசாங்க அதிபர், மன்னார் " என்று விலாசமிட்டு 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 ஆம் திகதி (19.8.69) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால் மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையிலும் " மன்னார் மாவட்ட வீதி அமைத்தல் " என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டா.

5. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னார் கச்சேரியில் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 ஆம் திகதி (19.8.69) பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

6. தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25 ம் பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகிதத் தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும் வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

7. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 6 ம் பந்தியில் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாதகாலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

ச. கதிர்காமநாதன்,
அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

மன்னார் கச்சேரி,
1969 ம் ஆண்டு ஆடி மீ 27 ந் உ.

8–421—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866.

---

## நீர்ப்பாசன இலாகா—பொலன்னறுவ உபபிரிவு

பொலன்னறுவ உபபிரிவிலுள்ள பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் பொலன்னறுவையிலுள்ள வட கீழ்ப் பெரும்பாக பொறியியலாளரால் 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாசம் 5 ஆம் திகதி காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன்பின்பு உடனே திறக்கப்படும்.

| வேலையின் பெயர் | பதிவுசெய்யப்பட்ட தொகை ரூபா | கேள்விக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| (1) கனிஷ்ட உத்தியோகத்தரின் 1 ஆம் இலக்க விடுதி அமைத்தல் | 30,000 | 50 |
| (2) கனிஷ்ட உத்தியோகத்தரின் 2 ஆம் இலக்க விடுதி அமைத்தல் | 30,000 | 50 |
| (3) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 1 வது மைல் | 60,000 | 100 |
| (4) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 2 வது மைல் | 65,000 | 100 |
| (5) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 3 வது மைல் | 65,000 | 100 |
| (6) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 4 வது மைல் | 60,000 | 100 |
| (7) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 5 வது மைல் | 65,000 | 100 |
| (8) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 6 வது மைல் | 68,000 | 100 |
| (9) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 7 வது மைல் | 75,000 | 100 |
| (10) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 8 வது மைல் | 70,000 | 100 |
| (11) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 9 வது மைல் | 70,000 | 100 |
| (12) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 10 வது மைல் | 71,000 | 100 |
| (13) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 11 வது மைல் | 75,000 | 100 |
| (14) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 12 வது மைல் | 80,000 | 100 |
| (15) மனம்பிட்டி அறலகன்வில பாதையை திருத்தி, கல்லிட்டு தார் போடுதல், 13 வது மைல் | 70,000 | 100 |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்குறித்த தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் கூட்டுறவுச் சங்கங்களும் கிராமாபிவிருத்திச் சங்கங்களுமே இவ்வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய கேள்விப்பத்திரங்கள் கவுடுல்ல/மின்னேரிய/பொலன்னறுவயிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் 30 ஆம் திகதி பி. ப. 4.30 மணிவரைக்கும் பெறக்கூடிய பத்திரங்களில் அனுப்பப்படல் வேண்டும். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டும். இவை அப்வொப்பந்தக்காரர்கள் கேள்விபத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்கு பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன், மேற்குறித்த ஏதாவதொரு பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 100 கேள்விக்கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் கட்டி பற்றுச்சீட்டு காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் பொலன்னறுவயிலுள்ள பொலன்னறுவ உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். துரைராசா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
பொலன்னறுவ உபபிரிவு.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
பொலன்னறுவ, 1969 ம் ஆண்டு ஜுலை மீ 25 ந் உ.

8–438—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

## இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி

1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்குக் கீழ்க் குறிப்பிடப்பட்ட புகையிரத நிலையங்களில் பொதிகள் ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் பதிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர்களிடமிருந்து வரும் கேள்விப்பத்திரங்களை பொதுமுகாமையாளர் காரியாலயம், இலங்கை அரசாங்க புகையிரதப்பகுதி, தபால் பெட்டி இல. 355, கொழும்பு—10 இல் உள்ள, கேள்விச்சபை அதிபர் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்வார் :—

| | | | |
|---|---|---|---|
| 1. | மாத்தறை. | 10. | வத்தேகமை. |
| 2. | காலி. | 11. | மாத்தளை |
| 3. | பொல்காவலை. | 12. | கற்றன் |
| 4. | மாகோ. | 13. | தலவாக்கலை |
| 5. | குருணாகலை | 14. | வட்டகொடை |
| 6. | மட்டக்களப்பு. | 15. | நாநு ஓயா. |
| 7. | யாழ்ப்பாணம். | 16. | அப்புத்தளை |
| 8. | நம்புக்கனை. | 17. | பண்டாரவளை. |
| 9. | சரசவி உயன. | 18. | பதுளை. |

2. பதிவுசெய்யப்படாத கேள்வியாளர் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை அல்லது அதற்கு முன்போ, பின்வரும் விபரங்களுடன் வர்த்தக அதிபர், இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி, கொழும்பு—10 என்ற விலாசத்திற்கு விண்ணப்பித்து பதிவுசெய்து கொள்ளவும்.

(அ) முந்திய அனுபவங்களுடன் குறிப்புடன் அண்மையில் பெறப்பெற்ற அனுபவம், தகுதி ஆகியவற்றைக் குறிக்கும் இரண்டு நற்சான்றிதழ், 26 ஆம் திகதி மே மாதம் 1961 ஆம் ஆண்டு திறைசேரிச் சுற்றறிக்கை இலக்கம் 1085 டீ/282/2 ஆ இல் காணப்படும் குற்றறிக்கைக்கமைய அப்பகுதி மாவட்ட வருவாய் அதிகாரியிடமிருந்து நிதி உறுதிப்பாடு பற்றிய விபரத்துடனான கூற்று.

(ஆ) அரசாங்கத்துடன் செய்து முடிந்த ஒப்பந்தங்களும், அச்சேவைகளின் விபரங்களைக் கொண்டதுமான கூற்று.

(இ) காணிச் சொத்துக்களும், வேறு சொத்துக்களும், அவை இருக்கும் மாவட்டம் அல்லது மாவட்டங்களான முழு விபரங்களடங்கிய கூற்று.

(ஈ) கேள்வியாளரின் பெயர், தவறிய ஒப்பந்தக்காரரின் பட்டியலில் இல்லையென உறுதி உரை.

3. கேள்விப்பணமாக ரூ. 100 புகையிரதப் பிரதம கணக்காளர் அலுவலகத்திலோ அல்லது கொழும்புக்கு வெளியேயாயின் கச்சேரியிலோ கட்டிய பற்றுச்சீட்டு கொடுப்பவர்களுக்கு, 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிவரையில் கேள்விப்பத்திரங்கள் வர்த்தக அதிபர், இலங்கைப் புகையிரதப்பகுதி, கொழும்பு—10 அலுவலகத்தில் விநியோகிக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகள் உள்ளதாய் இருத்தல் வேண்டும்.

4. இவ்வறிக்கைப் பிரதியுடன் விநியோகிக்கப்பட்ட விபர அறிக்கையுடனும் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் பொறியிடப்பட்ட உறையின் மேல் கேள்வியாளரின் பெயர் விலாசம், சேவை விபரத்துடன், தலைவர், கேள்விச் சபை, தலைமை அதிபர் காரியாலயம், த. பெ. இல. 355, கொழும்பு—10 என்னும் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபாலிலோ, அல்லது கேள்வியாளர் அல்லது அவர்களின் முகவர் மூலமோ கேள்விச்சபைத் தலைவரால் நியமிக்கப்பெற்ற அதிகாரியிடம் நேரில் கொடுத்தோ அவ் வதிகாரியிடமிருந்து, பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும். முதலாம் பந்தியில் குறிப்பிடப்பெற்ற திகதி நேரத்திற்குப்பின் அனுப்பிவைக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

5. கேள்வியாளர் விரும்பினால், கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் சமுகமாயிருக்கலாம். 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு இலங்கைப் புகையிரதப்பகுதி, த. பெ. இல. 355 கொழும்பு—10 இல் உள்ள பொதுமுகாமையாளர் காரியாலயத்தில் கேள்விச்சபை அதிபரின் அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

6. கேள்விப்பத்திரங்கள் மூடும் திகதியிலிருந்து ஆறு கிழமைகள் வரை கேள்வியாளர்கள் தங்கள் கேள்விகளை ஏற்பதற்கு ஏதுவாக வைத்திருத்தல் வேண்டும்.

7. மேலும் விபரங்கள் வேண்டின், வர்த்தக அதிபர், இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி, கொழும்பு—10 என்னும் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. டி. நம்பால,
பொது முகாமையாளர்,
இலங்கை அரசாங்க புகையிரதப்பகுதி.

தபால் பெட்டி இல. 355,
கொழும்பு—10,
1969 ம் ஷூ ஜூலை மீ 31 ந உ.

8—492—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### உபயோகிக்கத்தகாத பற்றறிகளினதும் கழிவுப் பொருட்களினதும் விற்பனை

### பொரலஸ்கமுவை, வெரகெரை விற்றுத்தீர்க்கும் வளவு

கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், உபயோகிக்கத்தகாத பற்றறிகளையும் இறப்பர் டியூப்புக்கள், ஒட்டுமடிப்புக்கள், 45 கலன் கொள்ளளவு தகரப் பீப்பாக்கள், அலுமினியத் தூசி, கலப்பு இரும்பு, வில் இலையுருக்கள், இரும்பு சேர்ந்த செம்பு, உருண்டை றேசர்கள், பித்தளை, வார்ப்பு இரும்பு, தகரப் பீப்பாக்கள், றிம்ஸ்கள், குடங்கள், பஸ் ஆசனச் சட்டகங்கள், ஹல்மில்லை வெட்டுத் துண்டுகள், கண்ணாடிக் கதவுகள், ஆமேசர் கம்பிகள், வெற்றுச் சாடிகள், போத்தல்கள், மோட்டார்கள், விசிறிகள், முதலியனவற்றைக் கொண்டுள்ள வேறு கழிவுப் பொருட்களையும் பொரலஸ்கமுவை, வெரகெரை விற்றுத் தீர்க்கும் இ. போ. ச. வளவிலிருந்து கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை 31.8.69 மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளுவார்.

கேள்விகள் முடிவடைவதற்குக் குறித்த திகதிக்கு முந்திய திகதி நண்பகல் 12.00 மணிவரை, இவ் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதான பத்திரங்களில், பொறியிட்ட கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படவேண்டும். கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாகத் தேவைப்படும் தொகையைக் காசாகக் கட்டி இதன் பற்றுச்சீட்டுக்களை கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்கு முன்னர் இது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

மொத்தத் தொகையாக 5,000 ரூபாவுக்குக் கேள்வியிடுபவர், எல்லாக் கூறுகளுக்கும் கேள்வியிடுவதற்கு அனுமதிக்கப்படுவார்.

பொரலஸ்கமுவை, வெரகெரை விற்றுத்தீர்க்கும் இ. போ. ச. வளவில் வழமையான அலுவலக நேரங்களில் பொருட்களைப் பார்வையிடலாம். விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான பொருட்களின் நிரல்களையும் கேள்விப் பத்திரக் கட்டுப்பணங்கள் முதலியனபற்றிய வேறு விவரங்களையும் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5.

8—530—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866.

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### கொழும்பு 1 காணி அபிவிருத்தித் திணைக்களத் தலைமை அலுவலக கட்டடத்தின் விரிவுபடுத்திய பகுதிக்கு மின் இணைப்புச் செய்வதற்கான கேள்விப்பத்திரம்

மேற்குறிப்பிட்ட சேவை சம்பந்தமாக 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபரால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்பிற்கு வெளியிலுள்ள ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்தி 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ந் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக் கூடிய படிவங்களில் இணைப்படியில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. வைப்புப்பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டைக் கேள்விப் பத்திரதாரர்கள் கவன்மாக வைத்திருந்து, வைப்புப்பணத்தை மீளப் பெற விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைக் கேள்விப்பத்திரங்களுடன் இணைக்கக் கூடாது.

4. கேள்விப்பத்திரப்படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோர் வைப்புப்பணத்தை மீளப்பெற வேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக்கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " கொழும்பு 1 காணி அபிவிருத்தித்திணைக்களத் தலைமை அலுவலகக் கட்டிடத்தின் விரிவு படுத்திய பகுதிக்கு மின் இணைப்புச் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர் எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்திக் திணைக்களம் அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியில் இருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

8. தேர்வு பெற்ற கேள்விக்காரர் பிணைப்பணம் செலுத்தவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் கேட்கப்படுமிடத்துத் தவறின் அவரது கேள்விப்பத்திர வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969 ம் ஆண்டு 8 ம் மாதம் 22 ந் திகதி முற்பகல் 11 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரங்களுக்குக் கேள்விக்காரர் விண்ணப்பிக்கும்போது இவ்வகையான வேலைகள் செய்வதற்குத் திறமையும், அனுபவமும் உண்டென்பதை நிரூபிக்க வேண்டும்.

11. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் தேர்ச்சியுள்ள/தேர்ச்சியற்ற இலங்கையரையே வேலை ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கமர்த்த வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களிலிருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

13. வேறு ஏதாவது தகவல்கள் வேண்டுமாயின் காணி அபிவிருத்தித் திணைக்கள மேற்பார்வைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 31 ந் திகதி
ஓ.ர/2/384.

8-511—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

---

## சமூக சேவைத் திணைக்களம்

வர்த்தகாமம், குருடர் புனருத்தாரண பயிற்சி நிலையத்திலுள்ள அழுக்குத் துணிகளை 1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 1 ஆம் திகதி முதல் 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 30 ஆம் திகதிவரை (இரு தினங்களுமுட்பட) சலவை செய்வதற்கு 1969 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 25 ஆம் திகதி, காலை 10 மணிவரை கீழே கையொப்பம் இட்டவரால் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

2. கீழே ஒப்பமிடுபவரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிப் பத்திரத்தில், கேள்விகள் எழுதப்படுதல் வேண்டும். கீழே ஒப்பமிடுபவரின் காரியாலயத்தில் அல்லது ஏதாவதொரு கச்சேரியில், இக்கருமத்திற்கெனக் கட்டுப்பணம் ரூபா 25 கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை ஒப்படைத்து கேள்விகள் எழுதும் மாதிரிப்பத்திரங்களைக் கீழே ஒப்பமிடுபவரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3. தபால் மூலம் மாதிரிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பஞ் செய்பவர்கள், உரிய பற்றுச்சீட்டையும் ஏற்கனவே அனுப்பினால்தான் மாதிரிப்பத்திரங்களை நேரத்திற்குப் பெற்றுக்கொள்ள முடியும்.

4. அரக்குப்பொறியிட்டுப் பதிவு செய்யப்பட்ட கேள்விகள் " சமூக சேவை அதிபர், சமூக சேவைத் திணைக்களம், த. பெ. இல. 577, கொழும்பு 3 " என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட தபால் உறையின் இடது கை மேல் மூலையில், " அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்குக் கேள்விகள் " முதலிய வார்த்தைகள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

தபால் மூலம் தங்கள் கேள்விகளை அனுப்ப விரும்பாதவர்கள் " சமூக சேவைத் திணைக்களத்தில், பாலதக்ஷ மாவத்தை, காலிமுகம், கொழும்பு 3 " என்ற விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டிக்குள் நேரில் கொண்டுவந்து போடலாம். தபால் உறையின் மேற்பக்கத்தில், கேள்விக்காரரின் பெயரும் தபால் விலாசமும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரத்தில் கேள்வித்தொகை இலக்கத்திலும் எழுத்திலும் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர், தமது ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு வேலையை ஆரம்பிக்க முன், பிணைப்பணம் ரூபா 50 ரொக்கத்தில் கட்டுதல் வேண்டும். இந்தப் பிணைப்பணம் வேலை திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டதும் திருப்பிக் கொடுக்கப்படும்.

7. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒருவர், தெரிந்தெடுக்கப்பட்ட விஷயம், அறிவிக்கப்பட்டதும், ஒப்பந்தஞ் செய்துகொள்ள மறுப்பின் அல்லது பிணைப்பணம் கட்ட மறுப்பின் அன்னாரின் கேள்விகட்டுப் பணம் பறிமுதல் செய்யப்படும்.

8. 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகட்கிணங்கிய கேள்விக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

9. கேள்விகள் மூடப்பட்ட நேரத்தின் பின்பு கேள்விக்காரர் சமூகத்தில் கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

10. வேறு விபரங்களை " சமூக சேவை அதிகாரி, த. பெ. இல. 577, கொழும்பு 3 " என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும்.

ஏ. எம். எம். சகாப்தீன்,
சமூகசேவை அதிபர்.

சமூக சேவைத் திணைக்களம்,
பாலதக்ஷ மாவத்தை,
த. பெ. இல. 577,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 8 ந் உ.

8–442—8.8.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,866

---

## சமூக சேவைத் திணைக்களம்

1969 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 25 ஆம் திகதி காலை 10 மணிவரை வத்தகாமம் குருடர் புனருத்தாரண பயிற்சி நிலையத்தில், 1969 ஆம் ஆண்டு ஒற்ரோபர் 1 ஆம் திகதி முதல் 1970 ஆம் ஆண்டு செத்தெம்பர் 30 ஆம் திகதி வரை (இரு தினங்களும் உட்பட) பாணும் பலகாரமும் வழங்குவதற்கு கீழே கையொப்பமிட்டவரால் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

2. கீழே ஒப்பமிடுபவரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிப்பத்திரத்தில் கேள்விகள் எழுதப்படுதல் வேண்டும். கீழே ஒப்பமிடுபவரின் காரியாலயத்தில் அல்லது ஏதாவதொரு கச்சேரியில் இக்கருமத்திற்கெனக் கட்டுப்பணம் ரூபா 25 கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை ஒப்படைத்து, கேள்விகள் எழுதும் மாதிரிப்பத்திரங்களைக் கீழே ஒப்பமிடுபவரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3. தபால் மூலம் மாதிரிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள், உரிய பற்றுச்சீட்டையும், ஏற்கனவே அனுப்பினால்தான் மாதிரிப்பத்திரங்களை நேரத்திற்குப் பெற்றுக்கொள்ளமுடியும்.

4. அரக்குப்பொறியிட்டுப் பதிவு செய்யப்பட்ட கேள்விகள் " சமூக சேவை அதிபர், சமூக சேவைத்திணைகளம், த.பெ. இல. 577, கொழும்பு 3 " என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட தபால் உறையின் இடதுகை மேல்மூலையில், " பாணும் பலாகாரமும் வழங்குவதற்குக் கேள்விகள் " முதலிய வார்த்தைகள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரத்தில், கேள்வித்தொகை, இலக்கத்திலும் எழுத்திலும் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் தமது ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு, வேலையை ஆரம்பிக்குமுன், பிணைப்பணம் ரூபா 100 ரொக்கத்தில் கட்டுதல் வேண்டும். இந்தப் பிணைப்பணம் வேலை திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டதும் திருப்பிக்கொடுக்கப்படும்.

7. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒருவர், தெரிந்தெடுக்கப்பட்ட விஷயம் அறிவிக்கப்பட்டதும் ஒப்பந்தஞ் செய்துகொள்ள மறுப்பின் அல்லது பிணைப்பணம் கட்ட மறுப்பின் கேள்விக்கட்டுப் பணத்தை இழப்பர்.

8. 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகட்கிணங்க கேள்விக் கட்டுப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

9. கேள்விகள் மூடப்பட்ட நேரத்தின் பின்பு, கேள்விக்காரர் சமுகத்தில் கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

10. வேறு விபரங்களை "சமூக சேவை அதிபர், த. பெ. இல. 577, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. எம். எம். சகாப்தீன்,
சமூகசேவை அதிபர்.

சமூக சேவைத் திணைக்களம்,
பாலதக்ஷ மாவத்தை,
த. பெ. இல. 577,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 8 ந உ.

8–443—8.8.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,866

---

## வித்தியா பகுதி

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கு மட்டக்களப்பு கல்விக் கந்தோர் கேள்விச் சபைத் தலைவரால் 1969 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 29 ந் திகதி பி. ப. 2.30 மணிவரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலைப் பெயர் | வேலையின் தன்மை |
|---|---|
| 1. ஹாடி தொழில் நுட்பக் கல்லூரி, அம்பாறை. | 2 வகுப்பறைக் கட்டடங்கள் அமைத்தல். |

2. கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சில், அரசாங்க வேலைப் பகுதியில் அல்லது நீர்ப்பாசனப் பகுதியில் கட்டுவேலைகட்கு 40,000 ம், அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு, (ரூபா 15,000 க்குக் குறைந்த வேலைகட்கு, நீர்ப்பாசன பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் கேள்விகள் அனுப்புவதற்கு தகுதி அற்றவர்) அவர்கள் கொழும்பு 2, கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் காரியாலயத்தில் அல்லது மட்டக்களப்புப் பிரதேச வித்தியாதிபதியின் அலுவலகத்தில் அல்லது கொழும்புக்கு வெளியே உள்ள எக்கச்சேரியிலேனும் ஒவ்வொரு வேலைத் தொடர்பிலும் ரூபா 100 கட்டுப்பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை மட்டக்களப்புப் பிரதேச வித்தியாதிபதிக்கு சமர்ப்பிக்குமிடத்து 1969 ஆம் ஆண்டு ஆவணி 28 ந் திகதி நண்பகல் 12 மணிவரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விக் கட்டுப்பணங்கள் கட்டுவதற்கான பணங்கட்டும் நறுக்குகள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் அலுவலகத்து பாடசாலை வேலைகள் கிளையிலிருந்து அல்லது மட்டக்களப்பு பிரதேச வித்தியாதிபதியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவேண்டும். காசோலைகள், காசுக்கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலே குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு தாம் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களென சான்று சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டுமே பணங்கட்டும் நறுக்குகள் கொடுக்கப்படும்.

3. மேற்போந்த 2 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு நீர்ப்பாசனப் பகுதி, அரசாங்க வேலைப்பகுதி அல்லது கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளதற்கமைய அங்கீகரிக்கப் பட்டுள்ள சங்கங்களும் இவ்வேலைக்குக் கேள்விகள் அனுப்பலாம். அங்கீகரிக்கப்பட்டுள்ள சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டுவதிலிருந்து தவிர்வு அளிக்கப்பட்டுள்ளன. கேள்விப் பத்திரம் வழங்கப்படுமுன் இச்சங்கங்கள் 2 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்குத் தாம் பதிவு செய்யப்பட்டுள்ளவையென சான்று சமர்ப்பிக்கவேண்டும்.

4. மேற்போந்த 2 ம், 3 ம் பந்திகளில் காட்டியுள்ள பிரகாரம் மட்டக்களப்புப் பிரதேச வித்தியாதிபதியிடம் இருந்து பெறற்பாலனவாகிய படிவங்களில், இரட்டைப்பிரதியில் கேள்விகள் அனுப்பப்படவேண்டும். இவரிடமிருந்து சகல விபரங்களும், தகவல்களும் பெற்றுக்கொள்ள முடிவதுடன் வேலை பற்றிய மாதிரிப் படங்களையும் இவருடைய அலுவலகத்தில் பார்வையிடலாம். அஞ்சல் மூலம் அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள் மட்டக்களப்பு கல்விக் கந்தோர் கேள்விச்சபைத் தலைவரின் விலாசத்துக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். ஸ்தல கேள்வியாளர்கள் தமது கேள்விப் பத்திரங்களைப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பாதவிடத்து அவர்கள் அல்லது அவர்களுடைய முகவர்கள் காகித உறைகளில் வைக்கப்பட்டு பொறிபிடப்பட்டு கேள்விப்பத்திரங்களை மட்டக்களப்பு வித்தியா கந்தோரின் அலுவலக உதவியாளரிடம் நேரிற் கொடுத்து, அவர் அதைப் பெற்றுக்கொண்டமைக்கான ஒரு கடிதத்தை அவரிடமிருந்து பெறவேண்டும். குறித்த காகித உறையின் மேற்பக்கத்தில் கேள்வி என்ன வேலை சம்பந்தமானதெனவும், கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபட வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பு வித்தியா கந்தோரில் 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 29 ந் திகதி பி. ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். கேள்விப் பத்திரங்களைத் திறக்கும் போது அங்கு பிரசன்னமாயிருக்கும் கேள்வியாளருக்குக் கேட்கக் கூடியதாக கேள்வியாளர்கள் பெயரையும் அவர்கள் கோரியுள்ள வீதங்களையும் வாசிப்பார்.

6. கேள்விகள் முடிவடையும் திகதியிலிருந்து 6 வார காலம் வரை தாம் கோரிய விகிதங்களின்படி வேலையை மேற்கொள்ள ஒப்புக்கொள்ள வேண்டும்.

7. மேலும் தேவைப்படும் விபரங்கள் மட்டக்களப்பு பிரதேச வித்தியாதிபதியின் கந்தோரிலிருந்து பெற்றுக்கொள்ளப்படலாம். அங்கே கேள்விகள் சம்பந்தமான பத்திரங்களையும் பார்வையிடலாம்.

8. 30.1.1966 க்கு முன்னர் பாடசாலை வேலைகட்கென வித்தியா பகுதியால் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் இக்கேள்வி அறிவித்தலின் நோக்கத்துக்காக கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சால் பதிவு செய்யப்பட்டுள்ளவராகக் கருதப்படுவர்.

வெ. சங்கரலிங்கம்,
வித்தியாதிபதி, (கிழக்குப் பிரதேசம்).

வித்தியா கந்தோர்,
மட்டக்களப்பு,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 31 ந உ.

8–510—8.8.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,866

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 13.6.1969 நெம்பர் 14,858 ல் கண்டுள்ள அறிக்கை நெம்பர் 6-376 ல் கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்கு

செல்ப்-புரோபெல்ட டிரெயிலிங் சக்ஷன் ஹோப்பர் டிரெஜர் வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப்பத்திரங்கள்.

திறக்கப்படும் தேதி 1969, செப்டம்பர் மாதம் 27 ந் தேதி முற்பகல் 10.00 மணியளவில் என்றும், கேள்வி சம்பந்தமான சாதனங்கள் வழங்குவது 1969, செப்டெம்பர் மாதம் 24 ந் தேதி நடுப்பகல் 12.00 மணிவரையென்றும் நீடிக்கப்பட்டிருக்கிறதென்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கிறோம்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1.

8–503—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866.

## அஞ்சல் தந்தித் திணைக்களம்

### லான்ட்றோவர், வில்லி ஜீப் வாகனங்களுக்கு இரட்டு கூடாரங்கள் செய்வதற்கான கூறுவிலைகள்

எங்கள் கூட்டத்திலுள்ள பின்வரும் வகையான வாகனங்களுக்கு இரட்டுக் கூடாரங்களும் மேலணை வேலைகளும் செய்வதற்காக கூறுவிலைகள் இத்தால் கோரப்படுகின்றன.

| | | வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (அ) லாண்ட் றோவர்— 88″ சில்லுத்தளம் | .. | 5 |
| (ஆ) லாண்ட் றோவர்—109″ சில்லுத்தளம் | .. | 3 |
| (இ) வில்லி ஜீப் .. .. | .. | 2 |

2. கூறுவிலைகள் பின்வருமாறு சமர்ப்பித்தல் வேண்டும்:—

(i) திணைக்களத்தினால் இரட்டு வழங்கப்படும் பொழுது ஒவ்வொரு வாகனத்துக்குரிய விதிதம் என்ன? (ஒவ்வொரு வாகனத்துக்கும் தேவைப்படும் இரட்டுத் துணியின் தொகை கொடுக்கப்படல் வேண்டும்.)

(ii) ஒப்பந்தக்காரரால் இரட்டுத்துணி வழங்கப்படும் பொழுது ஒவ்வொரு வாகனத்துக்குரிய விதிதம் என்ன ? (கூறுவிலையுடன் ஒரு மாதிரித் துணியும் அனுப்பிவைத்தல் வேண்டும்.)

(iii) இவ்வாகனங்களுக்கு மேலணை வேலைகளில் ஈடுபடுவதற்கு புறம்பான கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (ஒவ்வொரு வாகனத்திற்குரிய கூறுவிலையும் குறித்துரைக்கப்படல் வேண்டும்.)

3. பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளரிடமிருந்து ஏற்றுக் கொண்டமை சார்பான அறிவித்தல் கிடைக்கப் பெற்ற குறைந்தளவு ஆறு மாத கால எல்லைக்குள் பூரண வேலையும் பூர்த்தி செய்தல் வேண்டும். கூறுவிலையின் பெறுமானம் அதில் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

4. உறையின் இடப்பக்க மூலையில் “ ஜீப்புகளுக்கு இரட்டுக் கூடாரங்கள் செய்வதற்கான கூறுவிலைகள் ” என எழுதப்பட்டு, கொழும்பு 1, அஞ்சல், தந்திப் போக்குவரத்து தலைமை அலுவலகக் கட்டிடம், 5 ம் மாடி, பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளர் என முகவரியிட்டு சீலிடப்பட்ட பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது 5.9.1969 ந் திகதி மு. ப. 10.00 க்குப் பிந்தாமல் அவருக்குக் கிடைக்கக் கூடியதாக கூறப்பட்ட அலுவலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

5. கூறுவிலைகள் அதே நாளில் (5.9.69) மு. ப. 10.30 க்குப் பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். அப்பொழுது விண்ணப்பதாரர் பிரசன்னமளிக்கலாம்.

6. இது சார்பான மேலதிக விபரங்கள் கொழும்பு 10, மருதானை, அஞ்சல், தந்தி களஞ்சியத்திலுள்ள போக்குவரத்து உத்தியோகத்தரிடமிருந்து அலுவலக நேரத்தில் (மு. ப. 10.30 — பி. ப. 4.00) மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஜி. ஈ. டி. எஸ். எல்லாவலை,
பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளர்.

பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளர் அலுவலகம்,
அ. அ. பெ. 503,
கொழும்பு 1.

8–329—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866.

---

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### மெயிற்லண்ட் இடம், கொழும்பு 7 இல் உள்ள தேசிய உயர்தரச் சபைக்காக உத்தேசிக்கப்பட்ட கட்டடத்தை அமைத்தல்

விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு அமைச்சின் கேள்விச்சபைத் தலைவரால் மெயிற்லண்ட் இடம், கொழும்பு 7 இல் உள்ள தேசிய உயர்தரச் சபைக்கு கட்டடம் அமைப்பதற்காக 1969 ம் ஆண்டு செப்டம்பர் மீ 9 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்வியாளர்கள் சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இந்திணைக்களக் கண்காணிப்புப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளாக அனுப்பப்பட வேண்டும். மேலும் தேவையான விபரங்கள் யாவும் இவரிடமிருந்து பெறலாம்.

பொதுவேலைத்திணைக்களத்தில்/நீர்ப்பாசனத்திணைக்களத்தில்/அரசாங்க திணைக்களங்களில்/அரசாங்க கூட்டுத் தாபனங்களில் கட்டடம் அமைத்தலின் வேலைக்காக ரூபா 750,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். பதிவுச் சான்றிதழையும் கேள்விக் கட்டுப்பணமாக இத்திணைக்களச் சிறுப்பரிடம் ரூபா 250 செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்கும் ஒப்பந்தகாரர்களுக்கு 1969 ம் ஆண்டு செப்டம்பர் மீ 5 ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

து. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளருக்காக.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
த. பெ. இல. 544,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு யூலை மீ 23 ந் வ.

8–441—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 8 செப்டெம்பர் 1969 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை, உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட நிறப்பூச்சுக்களை வழங்குவதற்குக் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

கேள்விகள் முடிவடைவதற்குக் குறித்த திகதிக்கு முந்திய திகதி நண்பகல் 12.00 மணிவரை எனது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடியதான பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில், செய்யப்படவேண்டும். கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100/– ஐ காசாகக் கட்டி, இதன் பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்காக, எனது அலுவலகத்தில் காட்டவேண்டும். மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம விநியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

விநியோகப் பகுதி,
200, கிருல வீதி,
கொழும்பு 5,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 23 ந் வ.

8–481—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866.

---

## பொதுவேலைத் திணைக்களம்

கலபிந்துவெவ மருத்துவ மனைக்கு தண்ணீர் விநியோக வசதி அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள், கண்காணிப்பு பொறிவலாளர், வடமத்திய மாகாணத்தின் கேள்விச்சபையின் தலைவரால் 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பொதுவேலைத் திணைக்கள மருதன்கடவலை மாவட்ட நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப்படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப் பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 12,000/– க்குக் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தககாரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 25/– செலுத்திய பற்றுச்சீட்டை 1969 ஆம் ஆண்டு ஆகஸ்து மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10/–வீதம் மீளளிப்புச்செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்திபற்றுச் சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களைப் பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தக்காரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள பொது வேலைத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

எம். ஆர். பொன்னுத்து,
கண்காணிப்பு பொறிவலாளர்,
வட மத்திய மாகாணம்.

கண்காணிப்பு பொறிவலாளர் அலுவலகம்,
பொதுவேலைப் பகுதி, அனுராதபுரம்,
1969 ம் ஆண்டு யூலை மீ 27 ந் உ.

8–323—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

---

# பொருட்கள், விற்பனையும் பிறவும்

## கடற்றொழில் திணைக்களம்

### பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் என்ஜின்களின் ஏல விற்பனை

கீழே நிரலில் வழங்கப்பட்ட தேதிகளிலும், இடங்களிலும் பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் என்ஜின்கள் காலை 9.30 க்குப் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

2. நிரலில் குறிப்பிடப்பட்ட இடங்களில் என்ஜின்களைப் பார்வையிடலாம்.

3. கொடுப்பனவுகள் பணமாக, பின்வரும் முறைப்படி செலுத்தப்பட வேண்டும் :—

(அ) விற்பனை முடிந்த உடனடியாக என்ஜின் விற்கப்பட்ட விலையில் $\frac{1}{4}$ ;

(ஆ) என்ஜின் விற்கப்பட்ட விலையின் மீதி $\frac{3}{4}$, மூன்று நாட்களுட் செலுத்தப்பட வேண்டும்.

4. ஏலத்தில் விற்ற என்ஜின் உரிய பணம் செலுத்தி அப்புறப்படுத்தப்படும்வரை, அவ்விடத்தில் அதன் பாதுகாப்பு, விற்பனையில் வாங்கிய வரையே சாரும்.

நிரல்

| வள்ள எண் | யந்திர இனம் | இடம் | ஏலத்தின் திகதி |
|---|---|---|---|
| ரீ 405 | 31 ப.வ. புக் | கடற்றொழில் அலுவலகம், மாத்தறை | 14.9.69 |
| ரீ 399 | கவன்றிறி விக்ரர் | ஷை ஷை | |
| எப் 12 | 12 ப.வ. யன்மார் | ஷை ஷை | |
| ஜேபீஎப் 53 | அலிஸா கிரெக் | கடற்றொலில் அலுவலகம், செங்கலடி | 26.9.69 |
| ரீ 48 | 8 ப.வ. யன்மார் | கடற்றொழில் அலுவலகம், மட்டக்களப்பு | 27.9.69 |
| ரீ 62 | 8 ப. வ. யன்மார் | கடற்றொழில் அலுவலகம், தோட்டவெளி | 28.9.69 |
| எஸ 379 | 24 ப.வ. ரோர்பிடோ | ஷை ஷை | |
| ரீஎஸ் 24 | $12\frac{3}{4}$ ப.வ. லிஸ்ரர் | ஷை ஷை | |
| ரீஎஸ் 61 | கவன்றிறி விக்ரர் | ஷை ஷை | |
| ஜேபீ 84 | ருஸ்ஸியன் | ஷை ஷை | |
| ரீஎஸ் 57 | கவன்றிறி விக்ரர் | ஷை ஷை | |
| கேஎஸ்எல் 9 | பார்சன்ஸ் | ஷை ஷை | |
| ரீஎஸ் 21 | $12\frac{3}{4}$ ப.வ. லிஸ்ரர் | கடற்றொழில் அலுவலகம், பேசாலை | 29.9.69 |
| ஜீஓடீபீ 15 | 31 ப.வ. புக் | கடற்றொழில் அலுவலகம், மூதூர் | 28.9.69 |
| வீகேஎஸ் 18 | லிஸ்ரர் | பெரும்பகுதிக் கடற்றொழில் அலுவலகம், திருகோணமலை | 30.9.69 |
| — | லிஸ்ரர் சிலிண்டர் 2 | ஷை ஷை | |
| — | யன்மார் சிலிண்டர் 1 | ஷை ஷை | |
| — | யன்மார் சிலிண்டர் 1 | ஷை ஷை | |
| — | பார்சன்ஸ் சிலிண்டர் 1 | ஷை ஷை | |
| — | பார்சன்ஸ் சிலிண்டர் 1 | ஷை ஷை | |
| — | புக் சிலின். 1 | ஷை ஷை | |
| ரீ 235 | புக் சிலின். 1 | ஷை ஷை | |
| எம்சி 42 | பயிலட் | ஷை ஷை | |

ஐ. ஓ. கே. ஜீ. பர்ணந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 31 ந் உ.

8–468—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

## கடற்றொழில் திணைக்களம்

### யந்திரம் உள்ளனவும்/யந்திரம் இல்லாதனவும் பயனுறுத்தப்பட்ட வள்ளங்களின் ஏல விற்பனை

கீழே நிரலில் வழங்கப்பட்ட தேதிகளிலும் இடங்களிலும் யந்திரம் உள்ளனவும் யந்திரம் இல்லாதனவுமான பயனுறுத்தப்பட்ட வள்ளங்கள், காலை 9.30 க்குப் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

2. நிரலில் குறிப்பிடப்பட்ட இடங்களில் வள்ளங்களைப் பார்வையிடலாம்.

3. கொடுப்பனவுகள் பணமாக, பின்வரும் முறைப்படி செலுத்தப்பட வேண்டும் :—

(அ) விற்பனை முடிந்த உடனடியாக, வள்ளம் விற்கப்பட்ட விலையில் ¼ ;

(ஆ) வள்ளம் விற்கப்பட்ட விலையின் மீதி ¾, மூன்று நாட்களுட் செலுத்தப்பட வேண்டும்.

4. ஏலத்தில் விற்ற வள்ளம், உரிய பணம் செலுத்தி, அப்புறப்படுத்தும்வரை, அவ்விடத்தில் அதன் பாதுகாப்பு விற்பனையில் வாங்கிய வனையே சாரும்.

#### நிரல்

| வள்ள எண் | யந்திர இனம் | இடம் | ஏலத்தின் திகதி |
|---|---|---|---|
| எஸ் 189 | — | கடற்கரை, காலி | 11.9.69 |
| எஸ் 100 | — | எஸ்ஜஜீ வள்ளச்சாலை, கொக்கலை | 12.9.69 |
| எஸ் 14 | 8 ப.வ. யன்மார் | பிரிஸ்சைக் கடற்கரை | |
| எஸ் 108 | யன்மார் | டிை | |
| எஸ் 63 | — | டிை | 13.9.69 |
| எஸ் 93 | 10 ப.வ. குபோட்டா | டிை | |
| எம்ஜீ 52 | யன்மார் | டிை | |
| எம்ஜீ 2 | — | மகாத்தோட்டை காராஜ், மாத்தறை | 14.9.69 |
| ரீ 29 | பார்சன்ஸ் | தெவுந்தரைக் கடற்கரை | |
| எம்ஜீ 85 | — | தெவுந்தரைக் கடற்கரை | 15.9.69 |
| ரீ 36 | 11 ப.வ. பார்சன்ஸ் | அவிசாவலை | |
| எஸ் 127 | — | கந்தரைக் கடற்கரை | 16.9.69 |
| ரீ 300 | — | கோட்டேகொடை ஒறுவெல்லை | 17.9.69 |
| எஸ் 142 | — | தங்காலைக் கடற்கரை | 19.9.69 |
| எஸ் 68 | — | தங்காலைக் கடற்கரை | |
| எஸ்ஜஜீ 113 | ரோர்பிடோ | அம்பாந்தோட்டைக் கடற்கரை | 20.9.69 |
| எஸ் 219 | — | சுகததாச வள்ளச்சாலை, மட்டக்குளி | 20.9.69 |
| எஸ் 298 | — | இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபன வள்ளச்சாலை, மட்டக்குளி | |
| எஸ் 292 | — | டிை டிை டிை டிை | |
| எஸ் 323 | — | டிை டிை டிை டிை | |
| எஸ் 289 | — | டிை டிை டிை டிை | |
| எஸ்ஜஜீ 63 | — | டிை டிை டிை டிை | |
| எஸ்ஜஜீ 78 | — | டிை டிை டிை டிை | 21.9.69 |
| எஸ்ஜஜீ 55 | — | டிை டிை டிை டிை | |
| எஸ்ஜஜீ 52 | — | டிை டிை டிை டிை | |
| எஸ்ஜஜீ 51 | — | டிை டிை டிை டிை | |
| எஸ்ஜஜீ 100 | ரோர்பிடோ | டிை டிை டிை டிை | |
| எஸ்ஜஜீ 58 | — | டிை டிை டிை டிை | |
| ஜேபீஎப் 11 | — | ஹரிசன்ஸ் லிஸ்ரர் வள்ளச்சாலை, கொம்பனி வீதி | 22.9.69 |
| எம்ஜீ 5 | — | டிை டிை டிை | |
| என்எல் 42 | — | எம். ஜே. டயஸ் வள்ளச்சாலை, மட்டக்குளி | 23.9.69 |
| எஸ் 118 | — | டிை டிை டிை | |
| ரீ 371 | — | முகத்துவாரக் கடற்கரை | 24.9.69 |
| எஸ்ஜஜீ 42 | — | டிை டிை | |
| டீஜீ 27 | — | சிலாவத்துறை | 19.9.69 |
| ரீஎஸ் 61 | — | தெற்கு பார், மன்னார் | 20.9.69 |
| டீடீ 12 | 30 ப.வ. பேர்கின்ஸ் | பள்ளிமுனை | 21.9.69 |
| ஜேபீ 84 | — | வங்காலை | 22.9.69 |
| ரீஎஸ் 21 | — | நாட்டுக்குடாக் கடற்கரை | 23.9.69 |
| ரீ 86 | டையா | கடற்றொழில் துறைமுகம், கரையூர் | 11.9.69 |
| ரீ 136 | 10 ப.வ. புக் | பவர்கிருப்ட் வள்ளச்சாலை, யாழ்ப்பாணம் | 12.9.69 |
| எஸ் 308 | 24 ப.வ. ரோர்பிடோ | வேத்தியற் இலங்கைக் கடற்படை நிலையம், திருகோணமலை | 11.9.69 |
| ஆர்எஸ் 9 | 30 ப. வ. பேர்க்கின்ஸ | உள்துறைமுக வீதி, திருகோணமலை | 12.9.69 |
| ரீ 235 | — | சிலோன் ஷிப்யாட், சீனக்குடா | 13.9.69 |

ஐ. ஓ. கே. ஜீ. பர்ணந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 31 ந் உ.

471—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866

## ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும்

### 1969/70 க்குரிய சாராயக் குத்தகை மறுவிற்பனை

#### குருநாக்கல் மாவட்டம்

14,861 இலக்கம் கொண்ட 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 4 ந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் " 1969/70 க்குரிய சாராயக் குத்தகை விற்பனை குருநாக்கல் மாவட்டம் " என்னும் தலையங்கத்தின் கீழ் உள்ள பிரசுரத்தில் அடங்கியுள்ள நிபந்தனைகளுக்கமையும் இலக்கம் 7 நாரம்மல சாராயத் தவறனை மறு விற்பனைக்குக் கேள்விப் பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ந் திகதி மு. ப. 10.30 மணி வரைக்கும் குருநாக்கல் மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப் படும்.

எச். பி. திசாநயக,
அரசாங்க அதிபர்,
குருநாக்கல் மாவட்டம்.

குருநாக்கல் கச்சேரி,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 8 ந் உ.

8-319—8.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,866.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** *சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில்* **வர்த்தமானி** *வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

*அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட* **வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1969**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **ஒகத்து** | 1.8.69 | வெள்ளி | 25.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 8.8.69 | வெள்ளி | 1.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 15.8.69 | வெள்ளி | 8.8.69 | வெள்ளி | பி.ப | 3.30 |
| | 22.8.69 | வெள்ளி | 15.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 29.8.69 | வெள்ளி | 22.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **செத்தெம்பர்** | 5.9.69 | வெள்ளி | 29.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.9.69 | வெள்ளி | 5.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 19.9.69 | வெள்ளி | 12.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.9.69 | வெள்ளி | 19.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஒற்ரோபர்** | 2.10.69 | வியாழன் | 26.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.69 | வியாழன் | 2.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 17.10.69 | வெள்ளி | 9.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 24.10.69 | வெள்ளி | 17.10 69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 31.10.69 | வெள்ளி | 24.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| **நவெம்பர்** | 7.11.69 | வெள்ளி | 31.10 69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 14.11.69 | வெள்ளி | 6.11.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 21.11.69 | வெள்ளி | 14.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28.11.69 | வெள்ளி | 21.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **திசெம்பர்** | 5.12.69 | வெள்ளி | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.12.69 | வெள்ளி | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி | 12.12.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
1969 ம் ௵ யூன் ௴ 13 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது